விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 329 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 26 செவ்வாய்க்கிழமை (12.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தேர்தலுக்கான பணிகள் அனைத்தும் நிறைவு

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

தேர்தலுக்கான பணிகள் அனைத்தும் நிறைவடைந்துவிட்டதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 15

## டிசம்பர் மாதத்துக்குள் கடன் மறுசீரமைப்பு

### ஜனாதிபதி அநுர குமார



(கம்பஹா)

டிசம்பர் மாதத்திற்குள் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செய்யப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத் 15

### தமிழ் - முஸ்லிம் எம்.பிக்களுடன் இணைந்து

# தேசிய அரசாங்கம் அமைக்கப்படும்

### அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

தமிழ் - முஸ்லிம் எம்.பிக்களுடன் இணைந்து தேசிய ஐக்கிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### வாக்காளர் அட்டையை

## இணைய வழியில் பெற்றுக் கொள்ளலாம்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலுக்காக வாக்காளர்கள் தங்களது வாக்காளர் அட்டைகளை இணையவழி ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, குறித்த வாக்காளர் அட்டைகளைத் தேர்தல் ஆணைக்குழுவின் 15

## உரும்பிராயில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய்ப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவமானது நேற்றுக் காலை மானிப்பாய் கைதடி பிரதான வீதியில் உரும்பிராய் சந்திக்கும் கிருஷ்ணன் கோவில் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அரசடி வீதி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பிராசா தயகுமார் 15

### ஒருவரைத் தாக்கிய சம்பவம்

## சுன்னாகம் பொலிஸார் நால்வர் பணி நீக்கம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் இடம்பெற்ற விபத்தின் பின்னர் நபர் ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நான்கு உத்தியோகத்தர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் 15

### ஏழாலையில்

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மயிலங்காடு ஏழாலை தெற்குப் பகுதியில் உள்ள தோட்டக்கிணற்றிலிருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மயிலங்காடு ஏழாலை தெற்கைச் 16

### தெல்லிப்பழையில் விபத்து

## யாழுக்கு சுற்றுலா வந்த கம்பஹா பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கே.கே.எஸ் பிரதான வீதியில் தெல்லிப்பழை சந்திக்கும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த ஆல்டோ ரக கார் ஒன்றும் 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுநிலை தவறாது செய்திகளைத் தரும் உங்கள் நாளிதழ்

# நிறுத்தப்பட்ட நாகை - கே.கே.எஸ் பயணிகள் கப்பல் சேவை

## முற்பதிவு செய்தோர் பணத்தைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

சீரற்ற வானிலை காரணமாக கடந்த வியாழக்கிழமை முதல் சேவை நிறுத்தப்பட்டதனால் இந்தியாவின் நாகப்பட்டினத்திற்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான படகுச் சேவைக்கான கட்டணத்தை முன்பதிவு செய்த பயணிகளுக்கு முழுத் தொகையும் மீள செலுத்தப்பட்டது.

பணத்தினை பெறாதோர் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என இலங்கை - இந்திய கப்பல் சேவை தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ். நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மழையுடனான வானிலையினால் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (8), சனிக்கிழமை (9) மற்றும் ஞாயிற்றுக்கிழமை (10) ஆகிய நாட்களில் மழையுடனான வானிலையினால் கப்பல் சேவையை இயக்க முடியவில்லை.

இன்று (12) கப்பல் சேவை வானிலை சார்ந்து தீர்மானிக்கப்படும். எனவே நவம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு மேல் நாங்கள் முன்பதிவு செய்யவில்லை.

சீரற்ற வானிலையினால் தற்காலிகமாக கப்பல் சேவை இடைநிறுத்தப்படுவதற்கு முன்னர், கிட்டத்தட்ட 150 இருக்கைகள் முன்பதிவு செய்யப்பட்டிருந்தது.

கடல் அலையின் உயரம் மற்றும் காற்றின் திசை முன்னறிவிப்புகள் கப்பல் பயணங்களைத் திட்டமிட உதவுகின்றன.

பயணிகளை ஏற்றிச் செல்வது பாதுகாப்பானதா என்பதைத் தீர்மானிக்க, இலங்கை மற்றும் இந்திய வானிலை முன்னறிவிப்புகளையும், Windy app போன்ற செயலிகளையும் நாங்கள் நம்பியுள்ளோம் என தெரிவித்தார். (ம-7)

# தற்காப்புக்கு வழங்கப்பட்ட அனைத்துத் துப்பாக்கிகளையும்

## மீளக் கையளிக்க அவகாசம் நீடிப்பு

(கொழும்பு)

தற்பாதுகாப்பிற்காக பொது மக்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து வகையான துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை மீளப்பெறுவதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிகளை மீளப் பெறுவதற்கு முன்னதாக கடந்த 7ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக் கடற்படையின் வெலிசர முகாமில் உள்ள வணிகத் துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்துகள் கொள்முதல் பிரிவுக்கு கையளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கடந்த மாதம் 06ஆம் திகதி ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

தற்போது அனுமதிப்பத்திரம் பெற்ற நிலையில் வெளிநாட்டில் உள்ளவர்கள் உட்பட பல்வேறு தரப்பினர் பாதுகாப்பு அமைச்சிடம் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைய துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை திரும்பப் பெறுவதற்கான காலக்கெடுவை 21ஆம் திகதிவரை நீடிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேலும், மேற்படி கால நீடிப்பு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பில் அனுமதி பெற்ற அனைத்து உரிமையாளர்களுக்கும் எழுத்துமூலமாக முறையாக அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

97 சதவீத

# வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணி நிறைவு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக பிரதி தபால்மா அதிபர் ராஜித கே.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி இதுவரை 97% உத்தியோகபூர்வ வாக்காளர்கள் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக பிரதி தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதுவரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்காத வாக்காளர்கள், தமது பிரதேசத்தில் உள்ள தபால் நிலையத்திற்குச் சென்று பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# சி.ஐ.டியில் ஆஜராகுமாறு பிள்ளையானுக்கு அழைப்பு

(கொழும்பு)

உயிர்த்தஞாயிறு தினத் தாக்குதல் குறித்து சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட காணொளி தொடர்பான வாக்குமூலமொன்றைப் பெறுவதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 2019 ஈஸ்டர் தின ஞாயிறுத் தாக்குதல்கள் குறித்து கடந்த ஆண்டு சனல் 4 ஆவணப்படத்தில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

### 01.01.2025 தொடக்கம் 31.12.2025 வரையான காலப்பகுதிக்கு பளைநகர பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 12.11.2024 தொடக்கம் 25.11.2024 வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 26.11.2024 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 26.11.2024 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல. | கடை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | பளை பொதுச்சந்தை | 2,117,627.00 | 31,764.00 | 2,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 3,317,050.00 | 49,755.00 | 2,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | 59,533.87 | 5,000.00 | 2,000.00 |
| 04 | கோழியிறைச்சிக்கடை | 446,270.00 | 6,694.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 05 | கோழியிறைச்சிக்கடை | 92,400.00 | 5,000.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 26.11.2024 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையில் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ள வேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 5ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத அறை வாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்படல் வேண்டும்.
07. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
09. இறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே மாடு, ஆடு அறுத்தல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தயானந்தன் தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை**
(C-1566) 12.11.2024


ரணில் ஜனாதிபதியாக இருந்திருந்தால்

# ஐ.எம்.எப்பின் மூன்றாவது கடனுதவி கிடைத்திருக்கும்

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார

(காலி)

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்திருந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது கடனுதவி தற்போது கிடைத்திருக்கும் என முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாலும், பொதுத் தேர்தலை நடத்துவதற்காக தற்போதைய அரசாங்கம் எடுத்த தீர்மானத்தினாலும் சர்வதேச நாணய நிதியத்தின் தவணை கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போதைய அரசாங்கம் புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்த முயற்சிக்கின்றது. மக்களின் கருத்துக்களைக் கேட்காமல் கொண்டுவரப்படும் இந்த அரசியலமைப்பு இன, மத நிலையை மாற்ற முயற்சிக்குமா என்பது சந்தேகமே.

ஐ.எம்.எப் கடன் தவணை அடுத்த வாரம் நிறைவேற்றப்படாது. ஆனால் அதன் பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் இலங்கை வர உள்ளனர்.

மேலும், அரசாங்கம் நாடு மீண்டும் திவாலாகும் வாய்ப்பை பொருட்படுத்தாமல் தேர்தல் வெற்றிக்கான முடிவுகளையே எடுத்துள்ளனர் என்றும் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# வாக்காளர்களுக்கு வழங்கவிருந்த பொருட்கள் பறிமுதல்

(கொழும்பு)

ரஞ்சன்ராமநாயக்க தலைமையிலான ஐக்கிய ஜன நாயகக் குரல் கட்சியினால் வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்குத் தயார் செய்யப்பட்ட பொருட்களை வெள்ளவத்தை பொலிஸார் மற்றும் தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகள் குழு பறிமுதல் செய்துள்ளது.

வெள்ளவத்தையில் உள்ள தனியார் விடுதியொன்றில் இருந்த கட்சியின் ஸ்தாபகர் அல்லிராஜா சுபாஸ்கரனின் புகைப்படம் கொண்ட உலர் உணவுப் பைகள், போத்தல்கள், பவர் பேங்குகள், நாட்குறிப்பு, குவளைகள் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இது ஊழல் நடவடிக்கை என்பதால், தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் இவை அனைத்தையும் தேர்தல் ஆணைக்குழு மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு செல்ல உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவம்பர் 21 பாராளுமன்றத்தின் முதல் நாள் அமர்வு

(கொழும்பு)

புதிய பாராளுமன்றத்தின் முதல் நாள் நவம்பர் 21 ஆம் திகதி என பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி 10ஆவது பாராளுமன்றத்துக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட 196 பாராளுமன்ற உறுப்பினர்கள், தேசிய பட்டியலிலிருந்து 29 பாராளுமன்ற உறுப்பினர்கள் என பாராளுமன்றத்துக்கு 225 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பாராளுமன்றத்தின் முதல் அமர்வின் முதல் நாளில் பல சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகப் பாராளுமன்ற தகவல் தொடர்புப் பிரிவு அறிவித்துள்ளது. (நி-8)

## பொதுத்தேர்தல் தொடர்பில் அதிகரிக்கும் முறைப்பாடுகள்

(கொழும்பு)

எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

இதன்படி மேலும் 232 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது. இதன்படி செப்ரெம்பர் 26ஆம் திகதி முதல் நவம்பர் 9ஆம் திகதி வரையான பகுதியில் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் மொத்தம் 2,580 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையகம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில் இதுவரை பெறப்பட்ட மொத்த முறைப்பாடுகளில் 1,999 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது. (நி-8)

## வாக்கு எமது உரிமை! பயன்படுத்துமாறு வலியுறுத்து

(கொழும்பு)

**எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதில் இருந்து விலகியிருப்பதையோ அல்லது செல்லாத வாக்களிப் பதையோ தவிர்த்து உரிய முறையில் வாக்களிக்குமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப் பிரிய வாக்காளர்களை வலியுறுத்தியுள்ளார்.**



கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர்,

வாக்கு எமது உரிமை, எமது சக்தி, எமது குரல். அது எமது நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கின்றது.

இந்த உரிமையை நாம் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தினார். (நி-8)

## சிறுவர்களிடையே பரவும் வைரஸ் காய்ச்சல்



(கொழும்பு)

சிறுவர்களிடையே வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாகச் சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த காய்ச்சல் ஏறக்குறைய மூன்று நாட்களுக்கு மேல் நீடித்தால் அது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அண்மைய நாட்களாக குழந்தைகளுக்கு இடையில் வைரஸ் காய்ச்சல் அதிகரித்துள்ளது. இது இருமல் மற்றும் சளியுடன் கூடிய காய்ச்சலாகும்.

மேலும் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

எனவே இருமல், சளி, காய்ச்சல், உடல்வலி, வாந்தி இருந்தால் வைரஸ் காய்ச்சலுக்கான அறிகுறியாகும்.

எனவே மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் உரிய இரத்தப் பரிசோதனை செய்துகொள்ளுங்கள் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் வீடு, பாடசாலை உள்ளிட்ட இடங்களைச் சுத்தமாக வைத்திருக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி-8)

## இரு தினங்கள் மதுபானசாலைகளுக்குப் பூட்டு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என அறிவித்தல் வெளியாகி உள்ளது.

அந்தவகையில் நவம்பர் மாதம் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் மதுபானசாலைகள் மூடப்படும் என மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், 15ஆம் திகதி போயா தினமாக இருப்பதால் இவ்விரு நாட்களிலும் மதுபானசாலைகள் மூடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேர்தல் காரணமாக நாடளாவிய ரீதியில் மதுபானசாலைகள் மூடப்படும் தினங்களில் விதிமுறைகளை மீறி சட்டவிரோதமான முறையில் செயற்படும் மதுபானசாலைகளுக்கு சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு கலால் ஆணையாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுங்கள்

### பா.ம.க வலியுறுத்து

(சென்னை)

இந்திய - இலங்கை கூட்டுப் பணிக்குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி மீனவர் சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் இரு நாட்டு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுகளை விரைந்து நடத்த மத்திய, மாநில அரசுகள் ஏற்பாடு செய்ய வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "வங்கக்கடலில் மீன்பிடிக்க சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அவர்களின் மூன்று விசைப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. வங்கக் கடலில் கச்சத்தீவை ஒட்டிய பகுதிகளில் மீன் பிடிப்பதற்கு தமிழ்நாட்டு மீனவர்களுக்கு அனைத்து உரிமைகளும் இருக்கும் நிலையில் அவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து கைது செய்வது கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு காரணம் அவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பது தான் என்று இலங்கை அரசின் சார்பில் கூறப்படுவதெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாதவை.

தமிழ் நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படும் சூழலைப் பார்த்தாலே அதன் பின்னணியை புரிந்து கொள்ள முடியும். கடந்த 15 நாட்களில் தமிழக மீனவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

கடந்த 27ஆம் திகதி கைது செய்யப்பட்ட நாகை மாவட்ட மீனவர்கள் 12 பேர் இரு நாட்களுக்கு முன் விடுதலை செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து இப்போது 23 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மீனவர்கள் எப்போதும் தங்கள் நாட்டு சிறைகளில் அடைபட்டு கிடக்க வேண்டும் என்று நினைக்கும் இலங்கை அரசு, அதற்கான சதித்திட்டத்தின் அடிப்படையில் தமிழக மீனவர்களை கைது செய்து வருகிறது.

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் கடந்த மாதம் 29 ஆம் திகதி மீனவர் பிரச்சினைக்கான இந்திய - இலங்கை கூட்டுப் பணிக்குழுவின் கூட்டம் நடைபெற்றது. அதில் மீனவர் சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் இரு நாட்டு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுகளை நடத்த தீர்மானிக்கப்பட்டது. ஆனால், கூட்டம் முடிந்து 13 நாட்களாகியும் அதற்கான எந்த ஏற்பாடுகளும் செய்யப்படாதது வருத்தமளிக்கிறது.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேரையும் விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், இந்திய - இலங்கை கூட்டுப் பணிக்குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி மீனவர் சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் இரு நாட்டு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுகளை விரைந்து நடத்த மத்திய, மாநில அரசுகள் ஏற்பாடு செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்கு நடுவே சாதிக்க துடிக்கும்

## பாலஸ்தீன கால்பந்து அணி



**'எங்களின் கால்பந்து வரலாற்றில் நாங்கள் மூன்றாம் நிலை தகுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது இதுவே முதல் முறை, இதுவே எங்கள் வீரர்களுக்கு உந்துதலாக இருக்கும்' என பாலஸ்தீன கால்பந்து சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.**


இது குறித்து தனியார் ஊடகத்திடம் பேசிய பாலஸ்தீன் கால்பந்து சங்கத்தின் (PFA) தலைவர் ஜிப்ரில் ரஜோப், "எங்கள் செயற்பாடுகள் மீதான இஸ்ரேலியர்களின் கட்டுப்பாடுகள் அனைத்தையும் முடக்கிவிட்டன. தேசிய அளவிலான லீக் ஆட்டங்கள் உட்பட அனைத்தையும் நாங்கள் தற்காலிகமாக நிறுத்தினோம். இருப்பினும் மற்ற போட்டிகளில் நாங்கள் பங்கேற்பதை வலியுறுத்தினோம். அதில் கால்பந்து உலகக் கோப்பைத் தகுதிச் சுற்றும் ஒன்று.

ஆனாலும் கால்பந்து உலகக் கோப்பைக்குத் தகுதி பெறுவது எங்களின் உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு. எங்கள் அணியினர் நன்றாகச் செயற்படுகிறார்கள் என்று நினைக்கிறேன். சில வீரர்கள் தங்களின் உயிரை அல்லது தங்களின் சக வீரர்கள், பயிற்சியாளர்கள் உயிரை இழந்திருக்கின்றனர்.

உளவியல் ரீதியாக இது எங்களைப் பாதிக்கும். இருப்பினும் நாங்கள் நன்றாக முயற்சி செய்து விளையாடுகிறோம். எங்களின் கால்பந்து வரலாற்றில் நாங்கள் மூன்றாம் நிலை தகுச் சுற்றுக்கு தகுதி பெற்றது இதுவே முதல் முறை.

இதுவே எங்கள் வீரர்களுக்கு உந்துதலாக இருக்கும் என்று கூறினார். (நி-8)

# பாகிஸ்தான் அசத்தல் சுருண்டது ஆஸி. அணி



பேர்த்தில் ஆஸி அணிக்கு எதிராக நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணியானது எட்டு விக்கெட்டுகளினால் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியுள்ளது.

மெல்பர்னில் நடந்த முதல் ஒருநாள் போட்டியில் ஆஸி 2 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றிருந்தது.

இந்த நிலையில் மூன்றாவதும் இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் பேர்த்தில் நடைபெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி 31.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 140 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.


பின்னர் 141 ஓட்டம் என்ற இலக்கினை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 26.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை கடந்தது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை பாகிஸ்தான் 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையிலான ரி-20 தொடரின் முதல் போட்டி, எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி பிரிஸ்பேர்னில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இந்திய அணி பாக். செல்ல மறுப்பு

## பி.சி.சி.ஐ திட்டவட்டம்



2025ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் மார்ச் வரை ஐசிசி சம்பியன்ஸ் டிராபி தொடர் பாகிஸ்தானில் நடைபெற உள்ளது. இந்நிலையில், சம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்திய அணி பாகிஸ்தானிற்குச் சென்று விளையாடாது என பிசிசிஐ, உறுதியாக தெரிவித்துள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் இடையே இருக்கும் உள்விவகாரங்கள் மற்றும் இருநாடுகளுக்கு இடையே நீடிக்கும் பதற்றமான சூழல் காரணமாக 2008 ஆம் ஆண்டு ஆசியக் கோப்பைக்குப் பிறகு இந்திய அணி பாகிஸ்தானுக்குச் சென்று எந்த ஒரு கிரிக்கெட் போட்டியிலும் விளையாடவில்லை. இத்தொடரில் விளையாட ஆரம்பம் முதலே இந்தியா மறுப்புத் தெரிவித்து வந்த நிலையில், இந்திய அணியின் போட்டிகளை மட்டும் வேறு இடங்களுக்கு மாற்றி வைக்குமாறு கோரிக்கை வைத்தது எனினும் இந்திய அணி செல்வது சாத்தியமில்லை என உறுதியாகி உள்ள பட்சத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அல்லது இலங்கையில் நடைபெற்றால் அதில் கலந்து கொள்ளும் எனக் கூறப்படுகிறது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# அன்னமுன்னாப் பழம்/ சீத்தாப்பழம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name- Annona squamosa**
**Family- Annonaceae**
**Eng-Custard apple**



சிறு மரவகையைச் சேர்ந்த பழ மரமாகும். மருத்துவக் குணங்கள் நிறைந்தது. அன்னமுன்னாப்பழம் குளிர்ச்சியானது, சீதளமானது. மிக அருமையான சுவையுடைய பழம். இனிப்புச் சுவையும், தட்பமான வீரியமும் இனிப்பு விபாகமுமுடையது. இதன் பழச்சதைகளைத்தான் சாப்பிட வேண்டும். விதைகளையும் தோலையும் நீக்கிவிட வேண்டும். அதிகளவான போசனைக் கூறுகளைக் கொண்ட எமது பிரதேசத்தில் கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் வளரக் கூடிய மரமாகும். அன்னமுன்னா வகையில் வேறு இரண்டு வகைகளும் உண்டு.

அதில் ஒன்று முள்ளுச் சீத்தாப் பழமாகும் மற்றயது ராம சீத்தாப்பழம் அல்லது பறங்கி அன்னமுன்னா என்று அழைக்கப்படும். 3 பழங்களின் மருத்துவப் பண்புகளும் வேறுவேறு அன்னமுன்னா அல்லது சீத்தாப்பழம் சீக்கிரமாக பழுக்கக் கூடியது.

அதேபோல் சீக்கிரமாகவும் கெட்டுப்போகும். எனவே பழுத்து இரண்டு, மூன்று நாட்களுக்குள் சாப்பிட வேண்டும். புகை போடத் தேவையில்லை. சரியான வேளையில் மரத்திலிருந்து பழங்களை பறித்தால் ஓரிரு நாட்களில் பழுத்து விடும்.

சீத்தாப்பழத்தின் சக்கரை உயர்த்தும் திறனானது குறைவாகும். அதாவது 54 அல்லது 55 இல் இருக்கும். நார்ச்சத்தும் அதிகமாகக் காணப்படும்.

எனவே நீரிழிவு நோயாளிகள் தினம் ஒரு பழம் சாப்பிடலாம். சீத்தாப்பழம் சாப்பிட்டு வருபவர்களுக்கு புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புக் குறைவாகும்.

ஏனெனில் இதில் இருக்கும் Anti oxidant அதாவது எதிர் ஒட்சியேற்றத் தன்மைக்குரிய சத்துக்கள் காணப்படுகின்றது.

அத்துடன் சீத்தாப்பழத்தில் இரும்புச் சத்து காணப்படுகின்றது.

அதனால் ஈமோகுளோபின் குறைந்தவர்கள், இரத்தச் சோகை உள்ளவர்கள் தினம் ஒரு பழம் சாப்பிடலாம். சிறந்த பலனைக் கொடுக்கும்.

அடுத்ததாக மூளையின் ஆரோக்கியத்திற்கு சிறந்தது. ஏனெனில் சீத்தாப் பழத்தில் இருக்கும் உயிர்ச்சத்து B1 இலிருந்து B6 வரையிலான நிறைய விற்றமின் Bசத்துக்கள் இப் பழத்தில் இருக்கின்றது.

ஏனெனில் மூளையில் செரரோனின், போன்ற நல்ல உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய ஓமோன்களைத் தூண்டக் கூடிய வல்லமை இவ் சீத்தாப் பழங்களைச் சாப்பிட்டால் எமக்குக் கிடைக்கின்றது.

இவ் ஓமோன்கள் மன அழுத்தம், மனச் சோர்விலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்கின்றது. அதாவது எமக்கு ஒரு புத்துணர்ச்சி கிடைக்கின்றது.


அத்துடன் எமது உடல் எடையை ஆரோக்கியமாக அதிகரிக்கக் கூடிய வல்லமை உடையது. முக்கியமாக சீத்தாப்பழத்தில் காணப்படும் பொட்டாசியம் மகனீசியமான தாதுச்சத்துக்கள் மூளையில் பக்க வாதம், இருதயத்தில் மாரடைப்பு வராமல் தடுக்க கூடிய தாகும்.

சீதாப்பழத்தில் காணப்படும் உயிர்ச்சத்து C, A ஆனது கண் பார்வைக்கு சிறந்தது. முக்கியமாக போனினை தொடர்ச்சியாகப் பார்த்து பார்த்து கண்கள் வரண்ட கண்களாகவே மாறிவிடும்.

கண்களின் ஈரலிப்பு தன்மைக்கு தேவையான Lacrimal சுரப்பு குறைவாகிவிடும். இப் பழத்தை சாப்பிடும்போது Lacrimal சுரப்பு அதிகமாகி கண்களில் வழுவழுப்பு தன்மை ஏற்படும்.

கண்களின் ஏற்படும் வறட்சித் தன்மையை நீக்கி விடும். அத்துடன் இப் பழத்தில் இருக்கும் இன்னொரு தாதுச்சத்து மகனீசியம் சத்தாகும். இது எமது மூட்டு வீக்கம், மூட்டு வியாதி போன்றவற்றிற்கு சிறந்தது.

அடுத்து எமது தோல் அல்லது சருமம் பளபளப்பாகவும், சுருக்கங்கள் இன்றியும் மினுமினுப்பாகவும் இருப்பதற்கு சீத்தாப்பழத்தில் கொலாஜின் இனை அதிகப்படுத்தும் தன்மை இருப்பதனால் தோல் அல்லது சருமத்தின் பாதுகாப்பிற்கு அவசியமாகின்றது.



மிக முக்கியமாக சீதாப் பழத்தின் சதைகளில் கிடைக்க கூடிய நார்ச்சத்து மிக மிக முக்கியமானது. நார்ச்சத்தானது எமது செரிமானத்திற்கு மிக மிக அவசியமானது. சீத்தாப்பழம் சீதளமானது. ஆகவே இதைச் சாப்பிட்டால் சளி வைக்குமா என சந்தேகம் இருக்கலாம். குளிர்ச்சியானது தான் அது உடற் சூட்டைத் தணிக்கும். நிறைய அளவில் பழங்களை சாப்பிட்டால் தான் சளித்தன்மையை ஏற்படுத்தலாம்.

அந்த அளவு நிறைய பழங்களை ஒருவரால் சாப்பிட முடியாது. எனவே அவ்வளவு தூரம் சளியை ஏற்படுத்தக் கூடியது அல்ல. சீத்தாப்பழத்தை மதிய அல்லது இரவு சாப்பாட்டின் முன்பு 30நிமிடங்களுக்கு முன்பு சாப்பிட வேண்டும்.

செரிமானத்தையும் சீராக்கும் சீதாப்பழம் பருவ காலபழமாக (seasonal fruit) இருப்பதால் அப் பருவ காலங்களில் தினம் ஒரு பழம் தாராளமாக சாப்பிடலாம். இப் பழத்தில் காணப்படும் பொற்றாசியம் தாதுச்சத்தானது இரத்த அழுத்தத்தை சீராக வைத்திருக்க உதவும். எனவே உயர் குருதி அமுக்கம் உள்ளவர்களும் தினம் ஒரு பழம் சாப்பிடலாம். சீதாப் பழமானது தென் அமெரிக்காவினை தாயகமாக கொண்டிருந்தாலும் உலர் வலய நாடுகளான இலங்கை, இந்தியாவில் நன்கு பரம்பி வளரக் கூடியதாகும்.

# இராசிபலன்

12.11.2024
ஐப்பசி 26, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பிற்பகல் 12.50 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 3.30 மணிவரை

சுபநேரம் -10.36-12.06 மணிவரை
இராகுகாலம் -3.06-4.36 மணிவரை
உத்தான ஏகாதசி விரதம்,அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்.
மகம்.

**வளவன்**




தொழில் ரீதியாகப் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.




கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கௌரவமான நாள்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வாகன சுகமுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், செல்வாக்கு மேலோங்கும் நாள்.




வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.




பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி கூடும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம் பெறலாம், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு.




பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பயணங்களால் பலனுண்டு, எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.




பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு, தொழில் வளர்ச்சியுண்டு.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.




சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்துகொள்வார்.




குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**தவறான வழியில் சம்பாதித்தால் தவறான வழியில் செலவழியும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அபிவிருத்தி கூட்டம் பலதரப்பட்ட விடயங்கள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுவின் 3 ஆவது காலாண்டுக்குரிய குழுக் கூட்டமானது யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தின் போது, நல்லூர் பிரதேச செயலகத் துக்குட்பட்ட உதயபுரம் மணியந்தோட்டத்திலிருந்து நகர்புற பாடசாலைக்கு வரும் மாணவர்களின் நன்மை கருதி இலங்கை போக்குவரத்து சேவையினை பாடசாலை விடுமுறை விட்டு தொடங்கும் நாளிலிருந்து காலை 6.30 மணிக்கு ஆரம்பிக்கும் சேவையானது 7.45 மணிக்கு யாழ் நகரை வந்தடையும் என்றும் பிற்பகல் 1.10 இற்கு யாழ் நகரிலிருந்து 2.15 இற்கு மணியந் தோட்டம் உதயபுரத்தை சென்றடைய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் மீதான ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்கும் போது அதிபர் தன்னிச்சையாகத் தீர்மானம் எடுக்காது ஒழுக் காற்று குழு அமைத்து நடவடிக்கை எடுப்பதனை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

இதுவரை சிறுவர்களுக் கான பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பதிவு செய்யாதவர்களுக்கான நடமாடும் சேவையினை எதிர் வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் நடத்து வதற்கு நடவடிக்கை எடுக்கு மாறும் மேலும் பாடசாலை இடை விலகல் மற்றும் மீளிணைப்பு செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்த மாவட்ட பதில் அரசாங்க அதிபர் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அறிவுறுத்தப்பட்டது. (6-8-33)




காரைக்கவி கந்தையா பத்மானந்தன் எழுதிய சீத்துவக்கேடு என்ற தொலைந்துவிட்ட வாழ்வியல் நினைவுகள் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு நூலின் அறிமுகவிழா நேற்று முன்தினம் மாலை நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன்)

# வீதியில் கொட்டப்படும் கழிவுகள் கண்காணிக்க கமராக்கள்



(யாழ்ப்பாணம்)

யாழில் வீதியில் குப்பை போடுபவர்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கையை யாழ். மாநகர சபை ஆரம்பித்துள்ளது.

ஓட்டுமடம் சந்தியில் இருந்து வட்டுக்கோட்டை ஊடாக காரைநகர் செல்கின்ற வீதியில் விலங்குக் கழிவுகள், வைத்திய சாலை கழிவுகள், தொழிற் சாலை கழிவுகள் என்பன தொடர்ச்சியாக கொட்டப்பட்டு வந்தன. இதனால் அந்த பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், கொட்டப்படுகின்ற கழிவுகளை உண்பதற்கு நாய்கள் அவ்விடத்திற்கு செல்வதனால் வாகன விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த பகுதியை சி.சி.ரி.வி கமராக்கள் மூலம் 24 மணிநேரமும் கண்காணிப்பதற்கும் அவ்வாறு கழிவுகளை கொட்டுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் மாநகர சபை தயாராகியுள்ளது.

அத்துடன் குறித்த குப்பை போடும் பகுதிக்கு 100 மீற்றர்கள் தொலைவில் உள்ள மீள் சுழற்சி நிலையத்திற்கு குப்பைகளை வழங்க முடியும் என்ற அறிவித்தலையும் மாநகர சபை காட்சிப்படுத்தியுள்ளது. (6-8)



துன்னாலை கொத்தணி முன்பள்ளிச் சிறார்களின் மழலைகள் கலைநிகழ்வு நேற்று முன்தினம் துன்னாலை வடிவேலர் மணிமண்டபத்தில் இடம்பெற்றது. கொத்தணி தலைவி திருமதி சிவச்செல்வன் பவித்ரா தலைமையில் நடைபெற்றது. (படம்- மகாலிங்கம்)




ஈழத்தமிழர்கள் சார்பில் தஞ்சாவூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராஜராஜசோழ மன்னனின் 1039 ஆவது சதய விழாவில் கலந்து கொண்ட செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் மன்னனின் சிலைக்கு மாலை அணிவித்து சிறப்புரை ஆற்றியிருந்தார்.

# என்பியல் சங்கத் தலைவராக வைத்தியர் கோபிசங்கர்

(யாழ்ப்பாணம்)

2024-2025 இற்கான இலங்கை என்பியல் சங்கத்தின் (Srilanka Orthopedic Association) தலைவராக வைத்திய நிபுணர் தயாசிவம் கோபிசங்கர் பதவியேற்பு.

இவர் பரியோவான் கல்லூரியின் பழைய மாணவன் ஆவார்.

யாழ்.போதனாவில் இருந்து குறித்த சங்கத்திற்கு தெரிவான முதலாவது வைத்திய நிபுணரும் சர்வதேச சத்திர சிகிச்சையாளர் சங்கத்தின் இலங்கைக்கான பிரிவின் முதலாவது தலைவரும் என்பது குறிப்பிடத்தக்கது (6-8)



# பரதநாட்டிய போட்டி வைஷாலி முதலிடம்



(கரணவாய்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பரதநாட்டியப் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்து தனி நடன நிகழ்வில் பங்கேற்ற மாணவி கரன் வைஷாலி முதலிடம் பெற்று சாதனை பெற்றுள்ளார். (6-8-30)

# யாழ்.மாவட்டத்திற்கு 3 'ஸ்வாஹிமானி' விருதுகள்



(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் திணைக் களம் நடத்திய 'ஸ்வாஹிமானி 2024 தேசிய விருது வழங்கல் நிகழ்வில் யாழ். மாவட்டம் 3 விருதுகளை பெற்றுள்ளது.

சமூக சேவைகள் திணைக் களத்தால் நடத்தப்பட்ட "ஸ்வாஹிமானி" 2024 தேசிய விருதுகள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை அன்று சுகுறுபாயவிலுள்ள 19 ஆவது மாடியில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச வழிகாட்டல் குழு முதலாம் இடத்தினையும் 50 இற்கும் குறைவான மாற்றுத்திறனாளிகளை தொழிலில் ஈடுபடுத்திய நிறுவனமாக மாற்றுவலுவுடையோர் புனர்வாழ்வு நிறுவனம் இரண்டாம் இடத்தினையும், சிறந்த காட்சிப்படுத்தும் மட்டத்திலான படைப்பாளியாக கோப்பாய்பிரதேசத்தைச் சேர்ந்த த.சுரேஸ்குமார் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார்கள்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்த சாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன மற்றும் அமைப்பாளராக யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 08. பிறவுன் வீதி, ஆதன இலக்கங்கள் 118/4, 118/5, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் V. பரமநாதன் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு, பிறவுன் வீதி இலக்கம் 118/4, ஐ சேர்ந்த வீரசிங்கம் பரமநாதன் அவர்கள் 12.11.1984 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 179 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் அவரது மகளான வீரசிங்கம் தேவமலருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு, பிறவுன் வீதி இலக்கம் 118/4, ஐ சேர்ந்த வீரசிங்கம் பரமநாதன் அவர்கள் 12.11.1984 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 180 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் அவரது மகளான வீரசிங்கம் புவனேஸ்வரிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு, பிறவுன் வீதி இலக்கம் 118/4, ஐ சேர்ந்த வீரசிங்கம் மகள் தேவமலர் அவர்கள் 27.01.1987 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 317 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட கைதுறத்தல் உறுதி மூலம் தனக்குச் சொந்தமான பொதுப்பாதை பாவிப்பு உரித்தை கையுதிர்த்து S. வீரசிங்கம் மகள் புவனேஸ்வரிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு, பிறவுன் வீதி இலக்கம் 118/4, ஐ சேர்ந்த வீரசிங்கம் மகள் புவனேஸ்வரி அவர்கள் 27.01.1987 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 318 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் வீரசிங்கம் மகள் தேவமலருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு, பிறவுன் வீதி இலக்கம் 118/4, ஐ சேர்ந்த (தற்போது வெளிநாட்டில் வசித்துவரும்) இராசேந்திரமும் பெண் புவனேஸ்வரியும் இராஜசிங்கம் சிவதாஸீம் பெண் தேவமலரும் ஆகிய அவர்கள் 21.04.2004 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 4333 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் வீரசிங்கம் கேதாரநாதனுக்கும் பெண் தவமலருக்கும் வழங்கியுள்ளார்.

ஆதன விபரம் :- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வட கிழக்கு இறை "முதியனோடையும் மட்டக்களனியும்"

2 ஆம் பேருக்குரிய நில.பர. 1 குளி 1.6 ஆம் வீடும் கிணறும் (இதன் பதிவு டி 520/180) இதில்
4ஆம் பேருக்கு நன்கொடை கொடுத்த குளி 2.92 (இதன் பதிவு டி 546/186) நீக்கி மிகுதி குளி 16.68 2 ஆம் பேருக்குரியது.
மேற்படி இறை
"முதியனோடையும் மட்டக்களனியும்"
4 ஆம் பேருக்குரிய "குளி 17 உம் வீடும் கிணறும் (இதன் பதிவு டி 520/179) இதில்
2ஆம் பேருக்கு கைதுறத்தல் செய்த குளி 3.7 (இதன் பதிவு டி 545/170) நீக்கி மிகுதி குளி 13.3 4 ஆம் பேருக்குரியது
இருவகையாலும்
2 ஆம் பேருக்குரிய குளி 16.68- 3.7 சேர்ந்து நில.பர. 1 குளி 1.38 உம்
4ஆம் பேருக்குரிய குளி 13.3- 2.92 சேர்ந்து குளி 16.22 உம் முழுவதும் ஒரே துண்டாக இருக்கும் நிலப்பரப்பு. 1 குளி 17.60 உம். வீடும் கிணறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும்.
இந்த நிலப்பரப்பு 1. குளி 17.60 க்கும் எல்லை.
கிழக்கு தங்கவேலு சத்திய தேவனின் ஆதனம்.
வடக்கு எஸ். என். கே. சுந்தரத்தின் ஆதனம்.
மேற்கு கந்தையா திருலோக நாதனின் ஆதனம்.
தெற்கு பாதையும் தங்கவேலு சத்திய தேவனின் ஆதனம்.
இதடங்கலும் இன்னும் தெற்கேயிருக்கும் கிழக்கு மேற்காகச் செல்லும் 16 அடி அகல தனியார் பொது ஒழுங்கையினூடக பிறவுன் றோட்டுக்குப் போக்குவரத்துச் செய்யும் உரித்தும்.
ஆதனவரி மதிப்பீட்டு எண் 118/4, 118/5 பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

தற்போது வீரசிங்கம் கேதாரநாதனும் பெண் தவமலரும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வீரசிங்கம் கேதாரநாதனும் பெண் தவமலரும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-1566)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(533)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# 2000 பனம் விதைகள் நடுகைத் திட்டம்

(கரணவாய்)

மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு வடமராட்சி வல்லை பகுதியில் பனம் விதை நடுகை செயற்திட்டம் கடந்த புதன்கிழமை வடமராட்சி ஊடக அமையத்தினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பனம் விதை நடுகைத் திட்டத்தின் முதற்கட்டமாக, வடமராட்சி வல்லை பகுதியில் (யாழ் பீச் ஹோட்டல் அருகாமையில் இருந்து தொண்டைமானாறு வீதி சந்திப்பு வரை) பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியின் இரு மருங்கிலும் இரண்டாயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-60)

# வேலணை பிரதேச சபை, வேலணை
# தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக் கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல்-2024

1. வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2024.11.13 - 2024.11.28 நண்பகல் 12.00 மணி வரை**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2024.11.28 பி.ப.01.30 மணிவரை**
**கேள்வி திறக்கும் திகதி :- 2024.11.28 பி.ப.02.00 மணி**

2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக்கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புபட்டியலில் இடம்பெறாமல் இருத்தல் வேண்டும்
4. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும் அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை வழங்குனர் தெரிவில் இவ் விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.
5. தகுதிவாய்ந்த விலைக்கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம் வேலணை பிரதேச சபை வேலணையில் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப 14.00 மணி வரை மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா2000.00 இனையும் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு பணமாக ரூபா 5000.00 இனையும் பணமாக செலுத்துவதன்பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு, வேலணை பிரதேச சபை" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு இணைப் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் , சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் (பதிவுத் தபால் முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக்கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. கேள்வி திறக்கப்படும்போது கேள்வியாளரோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்கமுடியும்.
8 கேள்விகோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்விகோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
9 இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வேலணை பிரதேச சபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதாகும்.
10. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| பெறுகை இலக்கம் | சேவை விபரம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| NP/14/41(18)/P.Q. W/001/2024 | பாதுகாப்பு சேவை | 01 | சனி,ஞயிறு, பொது விடுமுறை 01 | 2024.12.01- 2025.11.30 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,**
**வேலணை பிரதேச சபை.**
**12.11.2024**

**தொலைபேசி இல - 021 221 0180**

(சி-1564)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# ‘உலக நாயகன்’ என அழைக்க வேண்டாம் கமல்ஹாசன் திடீர் அறிவிப்பு



(சென்னை)

தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமான கமல் ஹாசன் கடந்த 2018 ஆம் ஆண்டு மக்கள் நீதி மையம் என்ற அரசியல் கட்சியைத் தொடங்கினார். அரசியலில் குதித்தாலும் சினிமாவிலும் கவனம் செலுத்தி வரும் கமல் அடுத்தடுத்து படங்களில் கமிட்டாகி நடித்து வருகிறார்.

நடிப்பிற்காக சர்வதேச அளவில் விருதுகளை வாங்கிய கமல் உலக நாயகன் என்ற அடைமொழியுடன் ரசிகர்களால் அழைக்கப்படுகிறார். கமல் 10 கெட்டப்களில் நடித்த கே.எஸ். ரவிக்குமார் இயக்கிய தசாவதாரம் படத்தில் “உலக நாயகனே“ என்று தொடங்கும் பாடலே இடம்பெற்றிருக்கும்.

இந்நிலையில் உலகநாயகன் உள்ளிட்ட பட்டங்களை குறிப்பிட்டு தன்னை யாரும் அழைக்க வேண்டாம் என்று திடீர் அறிவிப்பு ஒன்றை கமல் ஹாசன் வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை கீழ்வருமாறு.

என் மீது கொண்ட அன்பினால் “உலக நாயகன்” உட்பட பல பிரியம் ததும்பும் பட்டங்களால் என்னை அழைக்கிறீர்கள். மக்கள் கொடுத்து, சக கலைஞர்களாலும் ரசிகர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இப்படிப்பட்ட பாராட்டுச் சொற்களால் மகிழ்ந்திருக்கிறேன். உங்கள் இந்த அன்பால் நெகிழ்ந்துமிருக்கிறேன். உங்களின் பிரியத்தின் மீது எனக்கு மாறாத நன்றி யுணர்வும் உண்டு.

சினிமாக் கலை எந்த ஒரு தனி மனிதனையும் விட பெரியது. அந்தக் கலையில் மேலும் மேலும் கற்றுக்கொண்டு பரிணாமம் அடைய விரும்பும் ஒரு மாணவன் தான் நான். பிற கலைகளைப் போலவே சினிமாவும் அனைவருக்கு மானது. அனைவராலு மானது. திறமையான கலைஞர்கள், தொழில்நுட்பவல்லுநர்கள், நல்ல ரசிகர்கள் ஒன்றிணைந்துதான் சினிமா உருவாகிறது.

கலையை விடக் கலைஞன் பெரியவன் இல்லை என்பது என் ஆழமான நம்பிக்கை. கற்றது கைம் மண் அளவு என்பதை உணர்ந்தவனாகவும் தொடர்ச்சியான முன் நகர்வில் நம்பிக்கை உழைத்துயர்பவனாகவும் இருப்பதே எனக்கு உவப்பானது. அதனால் தான் நிறைய யோசனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வர நேர்ந்தது. மேலே குறிப்பிட்டது போன்ற பட்டங்களையும் அடைமொழிகளையும் வழங்கியவர்களுக்கு எந்த மரியாதைக் குறைவும் வந்துவிடாத வண்ணம் அவற்றைத் துறப்பது என்பதே அது.

எனவே என் மீது பிரியம் கொண்ட அனைவருக்குமாக ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். இனிவரும் காலத்தில் என் ரசிகர்களும் ஊடக நண்பர்களும் திரைத்துறையைச் சார்ந்தவர்களும், மக்கள் நீதி மய்யம் கட்சித் தொண்டர்களும், சக இந்தியர்களும் என்னை கமல்ஹாசன் என்றோ கமல் என்றோ குறிப்பிட்டால் போதுமானது என்று கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார். (நி-8)

# அரசிற்கு எதிராக களமிறங்கிய ஷேக் ஹசீனா கட்சியினர்

## பங்களாதேஷில் பதற்றம்



(டாக்கா)

பங்களாதேஷ் அரசுக்கு எதிராக களமிறங்கிய ஷேக் ஹசீனா கட்சியினரால் மீண்டும் போராட்டம் வெடிக் கும் அபாயம் ஏற்பட்டுள்ள தாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா தற்போது இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார்.

இந்தநிலையில் அங்கு நடந்து வரும் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசுக்கு எதிராக நேற்று தலைநகர் டாக்காவில் போராட்டம் நடத்த முயன்ற ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியினரை இராணுவத்தினர் கைது செய்தனர்.

இதனால் அங்கு மீண்டும் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளதோடு பாரிய போராட்டம் வெடிக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் ஷேக் ஹசீனா மற்றும் தப்பியோடிய பிறநபர்களை நாட்டிற்கு கொண்டு வர இன்டர்போலின் உதவியை நாடப் போவதாக வங்காளதேச இடைக்கால அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இஸ்ரே

# கைவி

(ஜெருசலேம்) ==

இஸ்ரேல்-ஹ
நிறுத்த மத்திய
முயற்சிகளிலிருந்
விலகுவதாக க
துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவாகியதன் பின் கட்டார் இவ்வாறு அறிவித்துள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடி வரும் கிளர்ச்சி அமைப்பான ஹமாஸ் அந்நாட்டுக்குள் புகுந்து திடீர் தாக்குதல் நடத்தியது. இதில் சுமார் 1200 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். மேலும் 250 பேர் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இந்த அடியை எதிர்பார்த்திராத இஸ்ரேல் பழிக்குப் பழி வாங்க பாலஸ்தீன நகரங்களின் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியது. அவ்வாறு தொடங்கிய இஸ்ரேலின் தாக்குதல்கள் கடந்த 13 மாதங்களாக நீடித்து வருகிறது. இந்தத் தாக்குதல்களில் இதுவரை 43 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனிய பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒரு லட்சத்திற்கும் அதிக

# பேஜர் தாக
# பின்னணியி

## ஒப்புக் கொண்ட

(ஜெருசலேம்)

கடந்த செப்ரெம்பர் மாதம் லெபனானை தளமாகக் கொண்ட பயங்கரவாதக் குழுவான ஹிஸ்புல்லா வின் மறைவிடங்கள் மீதான பேஜர் மற்றும் வாக்கி-டாக்கி தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல் இருப்பதாக பிரதமர் பெஞ்ச மின் நெதன்யாகு ஒப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ரேல்-ஹமாஸ் பேச்சுவார்த்தை

# விரித்தது கட்டார் அரசு

ஹமாஸ் போரை
தியஸ்தம் செய்யும்
ிருந்து முழுமையாக
கட்டார் அறிவித்

ாக
ன்
வித்

ஆம்
பை
ச்சி
டுக்
தல்
00
ர்.
கதி
ட்ட

ாத
ங்க
ாக்
அவ்
ின்
தங்
தத்
43
ஸ்
பட்

திக

மானோர் படுகாயம் அடைந்துள்ளனர். உயிரிழந்த 43,552 பேரில் 70 சதவீதம் (30,450) பேர் பெண்கள் குழந்தைகள் என்றுஐநா அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே ஹிஸ்புல்லா அமைப்பை குறிவைப்பதாக லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதலை தொடங்கியது. இந்தத் தாக்குதல்களில் 2500 லெபனானியர்கள் வரை உயிரிழந்துள்ளனர்.

மேலும் தலை நகர் பெய்ரூட் உட்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த மக்கள் தங்கள் வீடுகளை துறந்து இடம்பெயர்ந்து வருகின்றனர். அண்டை நாடான சிரியாவுக்கு எல்லை வழியாக லட்சக்கணக்கானோர் இடம் பெயர்ந்தனர்.

இதுதவிர்த்து ஈரான் இஸ்ரேல் மோதலும் முற்றியுள்ளது. இஸ்ரேல் மீது ஈரான் கடந்த ஒக்டோபர் 1 ஆம் திகதி நடத்திய வான்வழித்தாக்குதலால் நிலைமை மோசமானது. இதற்குப் பதிலடியாக ஈரான் நிலைகள் மீது இஸ்ரேலும் தாக்கியது.

அடுத்ததாக ஈரான் அணு ஆயுத





தளங்கள் மற்றும் எண்ணெய்க் கிணறுகளை இஸ்ரேல் தாக்கினால் பதற்றம் அதிகரிக்கும். போரை நிறுத்த ஐ.நா மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் பலனளிக்காமல் போயின. பதிலாக ஐ.நா பொதுச் செயலாளர் இஸ்ரேலுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டார்.

இந்தச் சூழலில் இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்த பிணை கைதி பரிமாற்ற அமைதி பேச்சுவார்த்தை அமெரிக்கா, எகிப்து முன்னெடுப்பில் கட்டார் நாட்டில் வைத்து நடந்து வந்தது.

ஆனாலும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பிடி கொடுப்பதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில்தான் இஸ்ரேல்-ஹமாஸ் போரை நிறுத்த மத்தியஸ்தம் செய்யும் முயற்சிகளிலிருந்து முழுமையாக விலகுவதாக கட்டார் அரசு அறிவித்துள்ளது.போர்நிறுத்த ஒப்பந்தத்தை இறுதி செய்ய எந்தத் தரப்பினரும் விரும்ப வில்லை என விரக்தி தெரிவித்து கட்டார் இந்த முடிவை எடுத்துள் ளதாகத் தெரிகிறது.

ஹமாஸ் அதிகம் கட்டாரில் உலாவுவதும், டோஹா நகரில் ஹமாஸ் அமைப்பின் அரசியல் கட்டடம் இருப்பதும் அமெரிக்காவுக்குப் பிடிக்கவில்லை என்று தெரிகிறது.

எனவே ஹமாஸ் அலுவலகத்தை அடுத்த 10 நாட்களில் மூட கட்டார் உத்தரவிட்டதாகவும் செய்திகள் பரவின.

ஆனால் கட்டார் வெளியுறவுத்துறை அதனை மறுத்து எதற்கு வம்பு என்று அமைதிப் பேச்சுவார்த்தையிலிருந்தே மொத்தமாக விலகியுள்ளது.

தற்போதைய நிலைமைக்கு இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் அனைத்துத் தரப்பினரும் தங்கள் விருப்பத்தையும் தீவிரத்தையும் காட்டினால் மட்டுமே தங்கள் முயற்சியை மீண்டும் தொடர்வோம் என்று கட்டார் திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளது. (நி-8)


## ாக்குதல்கள்
## யில் இஸ்ரேல்
## ண்டார் நெதன்யாகு

தம்
ண்ட
ன
கள்
கி-
பில்
மர்
புக்

கொண்டார்.

இஸ்ரேலியப் பிரதமர் ஞாயிற்றுக்கிழமை நடந்த வாராந்திர அமைச்சரவைக் கூட்டத்தின் போது இந்த விடயத்தை முதன்முறை யாக ஒப்புக் கொண்டதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

செப்ரெம்பர் 16 மற்றும் 17 ஆம்



திகதிகளில் லெபனான் சிரியாவின் சில பகுதிகளில் வெடிபொருட்களைக் கொண்ட ஆயிரக்கணக்கான பேஜர்கள் மற்றும் வாக்கி-டாக்கிகள் வெடித்த தில் குறைந்தது 39 பேர் உயிரிழந்தனர் மற்றும் 3,000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந் தனர்.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல் உள்ளதாகக் குற்றம்சாட்டிய ஹிஸ்புல்லா, தாக்குதலுக்கு பழிவாங்குவதாகவும் அப் போது கூறியிருந்தது.

கடந்த ஆண்டு ஒக் டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் இஸ்ரேலிய நக ரங்களைத் தாக்கியதைத் அடுத்து காசாவில் போர் வெடித்ததில் இருந்து இஸ் ரேலும் ஹிஸ்புல்லாவும் லெபனான் எல்லையில் சண் டையிட்டு வருகின்றனர்.

அப்போதிருந்து ஈரான் ஆதரவுக் குழுவின் முன் னாள் தலைவர் ஹசன் நஸ்ரல்லா உட்பட பல ஹிஸ்புல்லா போராளிகள் கொல்லப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான நிலையத்திற்கு விஜித ஹேரத் திடீர் விஜயம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானங்களின் தாமதம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் குறித்து ஆராய அமைச்சர் விஜித ஹேரத் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, விமான நிலையத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பார்வையிட்ட அமைச்சர் அந்தந்தப் பிரிவு ஊழியர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடியுள்ளதாகக் கூறப்படுகிறது.

24 மணி நேரமும் விமானம் தாமதம் ஏற்படுவது தொடர்பில் பயணிகளுக்கு உடனடித் தகவல்களை வழங்கவும் தாமத காலத்தில் பயணிகளுக்கு அதிகபட்ச வசதிகளை வழங்கவும் விமான நிலையம் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸை பிரதிநிதித்துவப்படுத்தும் விசேட பிரிவு ஒன்று விமான நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் இதன் போது தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இந்த கால தாமதங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல விமானங்களில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இலங்கையின் உள்நாட்டு தேசிய விமான நிறுவனமான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பல விமான சேவைகள் அண்மைய நாட்களில் ரத்து செய்யப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும் விமானத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை சீர் செய்வதற்கு தமது குழுக்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வழக்கமான விமானப் பயண அட்டவணையை விரைந்து மீட்டெடுக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் விமான நிறுவனம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 300 | 500 | 300-350 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 185 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 300 | 350 | 270 | 300 |
| தக்காளி | 300 | 320 | 300 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 200 | 240 | 100-130 | 150 |
| கோவா | 200 | 180 | 250 | 250 | 300 |
| கரட் | 180 | 200 | 250 | 150 | 200 |
| பூசணி | 100 | 100 | 280 | 80-90 | 150 |
| புடோல் | 150 | 200 | 120 | 220 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 150 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 280 | 250 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 280 | 250 | 250 | 300 | 300 |
| பாகற்காய் | 500 | 500 | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 180 | 100 | 120 | 60-80 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 160 | 120 | 200 |
| பயற்றங்காய் | 400 | 200 | 180 | 200-250 | 250 |
| லீக்ஸ் | 280 | 300 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 180 | 120-140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 500 | 600 | 400-500 | 600 |
| முருங்கைக்காய் | 300 | 150 | 400 | 60-100 | 300 |
| போஞ்சி | 350 | 450 | 450 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 400 | - | 250 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 120 | 50-70 | 150 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 400-550 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150 | 140 | 180 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 600 | 1500 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 120 | 150 | 110 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | -- | 80 |
| ஈரப்பலா | 120 | 200 | 60 | -- | 60 |

## இன்று ஒரு தகவல் 261



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நினைப்பதும் நடப்பதும்

ஒரு ஆள் இருந்தான். நிறைய பேர் அவனைத் தேடி தினமும் வந்து கொண்டிருந்தார்கள்.அந்த அளவுக்கு அவன் ஒரு பெரிய மனிதன் என்று நினைக்கிறீர்களா?

அப்படி இல்லை!

எல்லோரிடமும் கடன் வாங்கிவிட்டான் சேர். கடன் கொடுத்தவர்கள் சும்மா இருப்பார்களா? தேடி வர ஆரம்பித்துவிட்டார்கள். பணம் தேவைப்படுகிற போதெல்லாம் அவன் கடன் வாங்கினான்.

கடனைத் திருப்பிக் கொடுக்கிற வரையிலே அந்தப் பணத்தை வைத்து ஏதாவது தொழில் செய்ய வேணும் அல்லவா? செய்யவில்லை. சும்மா இருந்துவிட்டான்.வாங்கின பணத்தை செலவு செய்தான். அது தீர்ந்து போனதும் மறுபடியும் கடன் வாங்கினான். செலவு செய்தான் கடன் அதிகமாகிவிட்டது.

கடன் கொடுத்தவர்கள் எல்லோரும் அடிக்கடி வந்து அவனைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். கடனையோ இவனாலே திருப்பிக் கொடுக்க முடியாது. ஆனால் கடன் கொடுத்தவர்கள் தொல்லையோ நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வந்தது.

இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பிக் கொள்வது எப்படி? என்று யோசனை செய்தான்.

ஒரு வழியைக் கண்டு பிடித்தான். பைத்தியம் பிடித்தது மாதிரி பாசாங்கு செய்ய ஆரம்பித்துவிட்டான்

எல்லோரும் அதை நிஜம் என்று நம்ப ஆரம்பித்துவிட்டார்கள். அவன் நிஜமாகவே மெண்டல் கேஸ் ஆகிவிட்டான். ஏதாவது செய்தாக வேண்டும் என்று சொந்தக்காரங்கள் எல்லோரும் முடிவு செய்துவிட்டார்கள். வைத்தியர்களைக் கூட்டிக் கொண்டு வந்து காட்டினார்கள்.

வைத்தியர்கள் எல்லோரும் ஒவ்வொருத்தரா வந்தார்கள் அவனைப் பார்த்தார்கள். மருந்து கொடுத்துவிட்டுப் போனார்கள். மருந்து கொடுக்க கொடுக்க அவன் அதிகமாக நடிக்க ஆரம்பித்துவிட்டான்.

கேஸ் வர வர முற்றிக் கொண்டிருக்கிறது மாதிரி தெரிந்தது பார்க்கிறவர்களுக்கு. அந்த வைத்தியர் சரியில்லை. இந்த வைத்தியர் சரியில்லை என்று நினைத்து புதுசு புதுசாக வைத்தியர்களைக் கூப்பிட்டுக் கொண்டு வர ஆரம்பித்தார்கள் உறவினர்கள்.

எதிலும் அவன் சரியாகிறது மாதிரித் தெரியவில்லை.

நடிக்கிறதிலே அவன் மிகவும் உறுதியாக இருந்தான்.அவ்வளவு கடன் வாங்கத் தெரிந்தவனுக்கு இது கூடவா தெரியாது? பிரமாதமாக நடித்தான். கடைசியாக ஒரு வைத்தியர் வந்தார். நிறைய அனுபவம் உள்ளவர். அறிவாளி. அவர் வந்தார்.

இவனைப் பரிசோதனை செய்தார். கையைப்பிடித்துப் பார்த்தார். நாக்கை நீட்டச் சொன்னார். அவன் முகத்தை கவனித்துப் பார்த்தார்.

இவனுக்கு உண்மையிலேயே பைத்தியம் இல்லை. இவன் நடிக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டார்.

உடனே அவனை இப்படி என் கூட கொஞ்சம் வா என்று சொல்லி தனியாக ஒரு அறைக்குள்ளே அழைத்துக் கொண்டு போனார். பின்பு சொன்னார்.

இதோ பாருப்பா! நீ இப்படி செய்யிறது சரி இல்லை. பல நாளைக்கு நீ அதே மாதிரி பாசாங்கு செய்து கொண்டு இருந்தாய் என்று வைத்துக் கொள். உனக்கு நிஜமாகவே பைத்தியம் பிடித்துவிடும். இப்பவே அதுக்கான ஆரம்ப அறிகுறிகள் உன்னிடம் தெரியுது. அதனாலே கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கிறது நல்லது என்றார்.

இதை கேட்டதும் அந்த ஆளு நிஜமாகவே பயந்து போய்விட்டான்.

நிதானமாக யோசித்துப் பார்த்தான்.வைத்தியர் சொன்னது நியாயமாகத் தெரிந்தது.

தன் மனது கொஞ்சம் மாறியிருக்கிறது மாதிரி தெரிந்தது.

ஆகா! ஏமாந்து போய்விட்டோம் என்பதை புரிந்து கொண்டான். அந்த நிமிடம் அவன் பாசாங்கு செய்வதை நிறுத்திவிட்டான்.பகவான் இராம கிருஷ்ணர் சொன்ன கதை இது. இந்தக் கதையை சொல்லிவிட்டு அவர் என்ன சொல்கிறார் என்றால்.

இடைவிடாமல் நீ எப்படி இருக்கிறதாக காட்டுகின்றாயோ அப்படியே ஆகிவிடுவாய். அதனாலே நல்லவனா இருக்கிறதாக நீ நினைத்தால் கூட நீ நல்லவனாக ஆகிவிட முடியும் என்கிறார்.அதனாலே நாமெல்லாம் வாழ்க்கையிலே நடிக்க வேண்டும் என்றால் கூட நல்லவனா நடிக்கிறதுக்கு முயற்சி செய்வது நல்லது.

நம்ம ஆள் ஒருத்தன் இந்தக் கதையிலே வருவது மாதிரியே நிறையக் கடன் வாங்கிவிட்டு பைத்தியக்காரன் மாதிரி நடிக்க ஆரம்பித்தான். அது நிஜம் என்று நம்பி அவனை ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே கொண்டு போய் சேர்த்துவிட்டார்கள் சொந்தக்காரர்கள் எல்லோரும்.

அவனைக் கொண்டு போய் ஒரு அறையினுள் தள்ளி கதவை சாத்தி மூடி விட்டார்கள். உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. இவன் பயந்து கொண்டே ஒரு மூலையிலே போய் உட்கார்ந்தான்.அந்தச் சமயம் அங்கே இருந்த இன்னொருத்தன் மெதுவாக இவன் தோளிலே கையை வைத்தான் இவன் நடுங்கிப் போய்விட்டான். விலகி ஓடினான்.

என்னைத் தொடாதே. நான் நிஜமாகவே பைத்தியம் இல்லை. ஒரு ஆளிடம் நான் நிறையக் கடன் வாங்கிவிட்டேன். அவனுக்குப் பயந்து போய் இப்படி நடிக்க ஆரம்பித்தேன். அவ்வளவு தான் என்றான். உனக்கு கடன் கொடுத்தவர்கள் கூட உன் தொல்லைக்குப் பயந்து பைத்தியம் மாதிரி நடிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.அது தெரியுமா? என்றான் அந்த ஆள்.அது எப்படி உனக்குத் தெரியும் என்றான் இவன். நல்லா கவனித்து என் முகத்தைப் பார் நான் தான்டா அந்த அப்பாவி என்றான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல்-2024

## வாசகர்களின் கருத்துக் கணிப்பு

- யாழ்ப்பாணம்- கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
- வன்னித் தேர்தல் மாவட்டம்

1. மேற்குறித்த இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் கட்சிகள் அல்லது சுயேட்சைக்குழுக்கள் பெற்றுக் கொள்ளும் ஆசனங்கள்.

2. பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பெயர்களை தனித்தனி தேர்தல் மாவட்டங்களாக (யாழ்ப் பாணம், வன்னி) குறிப்பிட்டு வலம்புரி நாளிதழின் **076 097 3128** எனும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்**

கருத்துக் கணிப்பை அனுப்புபவர்கள்
**முழுப்பெயர், முகவரி,**
**தே.அ.அ.இல,**
**தொ.பே.இல**
**பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம்**
ஆகிய விபரங்களை உள்ளடக்குவதுடன் ஒருவர் ஒரே மாவட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக் கணிப்புக்களை முன்வைக்க முடியாது என்பதையும் 16 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் இக் கருத்துக்கணிப்பில் பங்குபற்ற முடியும் என்பதையும் கவனத்தில் கொள்க.

**முக்கிய குறிப்பு**


மிகச் சரியான கணிப்பை அனுப்பி வைத்தவர்களின் பெயர் விபரம் அவர்களின் புகைப்படங்களுடன் வலம்புரியில் வெளியிடப்படும்.

மிகச் சரியான கணிப்பை வெளிப்படுத்தியவர்களில் குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள் தீர்மானிக்கப்படுவர்.

கருத்துக் கணிப்பை அனுப்புவதற்கான இறுதிநாள் **13.11.2024** நள்ளிரவு 12 மணி

**நிர்வாகம், வலம்புரி.**

# நீரிழிவு பரிசோதனை பரந்தனில் முன்னெடுப்பு



(தருமபுரம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நீரிழிவு நோயாளர்களை இனங்காணும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கண்டாவளை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் பரந்தன் பகுதியில் வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோர் மற்றும் பேருந்துக்காக காத்து நின்ற பலரிடம் நீரிழிவு பரிசோதனை செய்யப்பட்டது.

மாவட்ட தொற்றா நோய்ப்பிரிவின் வைத்தியர் க.ரஞ்சன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை உலக நீரிழிவு வாரமாக பிரகடனப்படுத்தி நோயாளர்கள் இனங்காணப்படவுள்ளனர். (6-8-316)



கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்களை சந்தித்த சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் இதன்போது மாவட்டத்தின் தேர்தல் நிலைமை தொடர்பாக கேட்டறிந்து கொண்டனர்.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3256

**சஞ்சய்**

எப்பேர்ப்பட்ட ஆண்மகனையும் மனைவியின் அந்த ஒரு சொல் கலங்கடித்து விடும்



உப்புமா செய்து வைத்திருக்கேன் சாப்பிட்டு போங்க...

**தருணியா**

உலகினை வெல்ல இரு "கை"கள் வேண்டும்...



முகத்தில் புன்ன "கை"
அகத்தில் நம்பிக் "கை"

**ரித்திக்**


கணவன்: ஒரு துணி எடுக்க ஏன் அம்மா ரொம்ப நேரம் எடுக்கிறாய் நீ?



மனைவி: கட்டினவனத் தான் சரியா தெரிவு செய்யல.. கட்டிக்கிறதாவது சரியா இருக்கட்டும் என்று தான்...

**சைத்ரா**

Sunday சாயங்காலம் வந்தாலே Monday ஞாபகம் வந்திடுது டொக்டர்



கொஞ்சம் என்ன என்று பாருங்க டொக்டர்

**அகனியன்**




**சாயி**

ஓசியில் கிடைக்கும் அறிவுரையை காசு கொடுத்து வாங்கும் நவீனத்துவத்திற்கு பெயர்தான் கன்சல்டிவ்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 628





குந்தவையின் உள்ளம் இப்போது உண்மையாகவே குழப்பத்தில் ஆழ்ந்தது.

## 28 ஆம் அத்தியாயம்
## ஒற்றனுக்கு ஒற்றன்

மௌனமாயிருந்த அரசிளங்குமரியைப் பார்த்து முதன் மந்திரி அநிருத்தர் "தாயே! ஏன் பேசாமலிருக்கிறாய்? வந்தியத்தேவனை இன்னமும் நீ நம்புகிறாயா? என்று கேட்டார்.

"ஐயா! அமைச்சர் திலகமே! நான் என்ன சொல்லட்டும்? இன்னும் சற்று நேரம் தாங்கள் பேசிக் கொண்டே போனால் என்னை நானே சந்தேகிக்கும்படி செய்து விடுவீர்கள் போலிருக்கிறதே!" என்றாள் இளவரசி.

"காலம் அப்படி இருக்கிறது அம்மா! யாரை நம்பலாம், யாரை நம்பக் கூடாது என்று தீர்மானிப்பது இந்த நாளில் அவ்வளவு சுலபமில்லைதான். நாலாபுறமும் அவ்வளவு விரோதிகள் சூழ்ந்திருக்கிறார்கள். அவ்வளவு மர்மமான சூழ்ச்சிகள் நடந்து வருகின்றன!" என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

"ஆனாலும் தங்களுக்குத் தெரியாத மர்மமும் தாங்கள் அறியாத சூழ்ச்சியும் இராது என்று தோன்றுகிறது. நான் அனுப்பிய தூதனைப் பற்றி அவ்வளவு விபரங்களையும் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?" என்று கேட்டாள் குந்தவை தேவி.

அம்மணி! நான் ஆயிரம் கண்களும் இரண்டாயிரம் செவிகளும் படைத்தவன். நாடெங்கும் அவை பரவியிருக்கின்றன. பழுவூர் அரண்மனையில் என் ஆட்கள் இருக்கிறார்கள். பழுவூர் இளையராணியின் மெய்க்காவலர்களிலே எனக்குச் செய்தி அனுப்புகிறவன் ஒருவன் இருக்கிறான். ஆழ்வார்க்கடியானைப் போல் ஊர் ஊராக அலைந்து திரிந்து செய்தி கொண்டு வருகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். சுற்றுப்புற நாடுகளிலோ நான் அறியாமல் எந்தக் காரியமும் நடைபெற முடியாது என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆயினும் யார் கண்டது? என்னையும் ஏமாற்றக் கூடியவர்கள் இருக்கலாம். நான் அறியாத மர்மங்களும் நடைபெறலாம்!

இவ்வாறு முதல் மந்திரி சொன்னபோது பொன்னியின் செல்வன் இப்போது சூடாமணி விஹாரத்தில் இருப்பதும் இந்தப் பொல்லாத மனிதருக்குத் தெரியுமோ என்ற எண்ணம் குந்தவைக்கு உண்டாயிற்று. அதை அவள் வெளியிடாமல் மிகுந்த சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள்.

"ஐயா! நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கலாம் ஆனால் அந்த வாணர் குல வீரன் பழுவூர் ராணியின் ஒற்றனாயிருப்பான் என்று மட்டும் என்னால் நம்பமுடியவில்லை. அவனைத் தயவு செய்து விடுதலை செய்து விடுங்கள்! என்றாள்.

நன்றாக யோசித்துப் பார், அம்மா! அந்தப் பெண் நந்தினியிடம் மாயமந்திர சக்தி ஏதோ இருக்கிறது! சிவபக்தன் மதுராந்தகன் அவளுடைய வலையில் விழுந்து இராஜ்யத்தில் ஆசை கொண்டான். சம்புவரையரின் மகன் கந்தமாறன் அவளுடைய ஓலையை எடுத்துக் கொண்டு ஆதித்த கரிகாலனிடம் போயிருக்கிறான்.

பழுவேட்டரையர்களின் பரம விரோதியாயிருந்த பார்த்திபேந்திரன் இன்று பழுவூர் ராணியின் அடிமையாகி விட்டான். சோழ இராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து மதுராந்தகனுக்கு ஒரு பகுதியும், ஆதித்த கரிகாலனுக்கு ஒரு பகுதியும் கொடுத்து ராஜி செய்து வைக்கவும் அவன் முன் வந்திருக்கிறான்"

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## நாட்டுப்பற்று



(நேற்றைய தொடர்ச்சி...)

குழந்தையில்லாத ஏக்கத்தில் நம் மன்னர் இறந்துவிட்டால், பின்னர் நம் நாடு சரியான தலைமையில்லாமல் பகைவர்களின் கையில் சிக்கி, அடிமையாகி விடும் என்றான்.

அதற்கு நாம் என்ன செய்வது? என்றாள் ரத்னா. "நம் நாட்டைக் காப்பாற்ற நாம் ஒரு தியாகம் செய்ய வேண்டும். நமது குழந்தையை வைகை ஆற்றுக்கு அர்ப்பணிக்க வேண்டும்" என்றான்.

ரத்னா இதைக் கேட்டதும் அதிர்ச்சியில் மயங்கும் நிலைக்குச் சென்றாள். குழந்தையைப் பிரிவது அதுவும் ஆற்றில் விடுவது என்பதை அவளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

ஆயினும் குழந்தையை விட நாடும் மன்னரும் மிக முக்கியம் என்பதைப் பலவாறு தன் மனைவியிடம் எடுத்துச் சொன்னான் வேலப்பன்.

கணவனின் வார்த்தையை மீறாத அவன் மனைவியும் கண்ணீரோடு அதற்குச் சம்மதித்தாள். மறு நாள் குழந்தையை எடுத்துக் கொண்டு ஆற்றுக்கு வந்தாள்.

நடப்பதையெல்லாம் பார்த்துக்கொண்டு எந்தவிதச் சலனமும் இல்லாமல் வைகை ஓடிக் கொண்டிருந்தது.

ரத்னா ஆற்றில் இறங்கி கண்ணீரோடு கடைசியாய்த் தன் மகனை முத்தமிட்டாள். ஒரு மூங்கில் தட்டில் குழந்தையைக் கிடத்தி, ஆற்றில் விட்டாள். பிறகு கதறி அழுதவாறே வீட்டுக்குச் சென்றாள்.

இச் செய்தி அரசனுக்கும் அரசிக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வேலப்பனையும் ரத்னாவையும் அழைத்து, கண்களில் நீர் மல்க நன்றி தெரிவித்தனர்.

அவர்கள் இருவரையும் புகழ்ந்து, "வேலப்பா, நீங்கள் இருவரும் செய்திருக்கும் தியாகத்துக்கு இந்த நாட்டையே பரிசாக உங்களுக்குக் கொடுத்தாலும் ஈடு செய்ய முடியாது. ஆயினும் நான் அறிவித்தபடி இந்த நாட்டில் பாதியை உங்களுக்குப் பரிசாகத் தருகிறேன்" என்றார் அரசர்.

வேலப்பன் மன்னரை வணங்கி, "பிரபு! தாங்கள் அளிக்கும் பரிசுக்காக நாங்கள் இதைச் செய்யவில்லை. தங்கள் மீதுள்ள அன்பினாலும் இந்த நாட்டின் மீது நாங்கள் வைத்திருக்கும் பாசத்துக்காகவும்தான் நாங்கள் இந்தக் காரியத்தைச் செய்தோம்" என்று கூறி அரசன் அறிவித்த பரிசை ஏற்க மறுத்துவிட்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தவறுகளை எண்ணியே வருந்தி தளர்ந்து விடாமல் நல்லவைகளை செய்ய எழுந்து நடைபோடுவதே சிறப்பம்சமாகும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாக்களிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருங்கள்

நாளை மறுதினம்(14) இந்த நாட்டின் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல் என்பது மிகவும் முக்கியமானது.

மக்களால் மக்களுக்காகத் தெரிவு செய்யப்படும் மக்களாட்சியே ஜனநாயகம் என்கிறார் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன்.

ஆக, ஜனநாயக நாட்டில் மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற அரசாங்கம் நல்லாட்சி செய்ய வேண்டுமாயின், அரசாங்கத்தைத் தெரிவு செய்வதில் நாட்டு மக்களின் வகிபாகம் முழுமையாக இருக்க வேண்டும்.

எனினும் கடந்த காலத் தேர்தல் முடிவுகளை ஆய்வு செய்யும்போது, சராசரி 50 சதவீதமான வாக்குகளே பதிவாகின்றன.

உண்மையில் ஒரு ஜனநாயக நாட்டில் இது ஆரோக்கியமான விடயமல்ல.

மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற அரசாங்கம் எனும்போது, வழங்கப்பட்ட வாக்களிப்பில் யார் கூடிய வாக்குகளையும் அதனூடு கூடிய ஆசனங்களையும் பெறுகின்றனரோ அவர்களே ஆட்சி அமைக்கின்றனர்.

ஆனால் இங்கு எத்தனை சதவீதமான மக்கள் வாக்களிப்பில் பங்கேற்றனர் என்ற விடயம் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை.

உண்மையில், வாக்களிக்கத் தகைமை பெற்றவர்களில் எத்தனை சதவீதமான வாக்காளர்கள் வாக்களிக்கின்றனர் என்ற விடயமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இருந்தும் அதுபற்றி எவரும் முதன்மைப்படுத்துவதில்லை.

அதாவது ஒருவரின் வாக்குரிமையை வலியுறுத்துவதில் பங்காற்றுகின்ற சட்டங்கள் வாக்களிப்பதன் அவசியத்தில் தளர்வைக் காட்டுகின்றன.

ஆம், ஒரு ஜனநாயக நாட்டில் நடைபெறுகின்ற பொதுத் தேர்தலில் ஒரு வாக்காளர் தனது வாக்களிக்கும் உரிமையைப் பிரயோகிக்காமல் இருக்க முடியும் என்ற சுதந்திரம் தேர்தலையும் பொது மக்களையும் அன்னியப்படுத்தி நிற்கின்றது.

ஆக, ஒருவரின் வாக்குரிமை என்பது எந்தளவுக்கு சட்டரீதியாக வலுப்படுத்தப்பட்டுள்ளதோ அதேபோன்று வாக்காளர்கள் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்பதும் சட்டரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எனினும் இது நடைமுறையில் சாத்தியமாவது எப்போது என்பதை அறுதியிட முடியாது.

ஆகையால் சட்டங்கள் நம்மை வழிப்படுத்தட்டும் என்றிராமல், மிகப் பெருமளவு பணச் செலவில் மக்கள் ஆட்சிக்காக நடைபெறுகின்ற பாராளுமன்றத் தேர்தலில் அனைத்து மக்களும் தவறாமல் வாக்களிக்க வேண்டும்.

அவ்வாறு அனைத்து மக்களும் வாக்களிக்கும்போதுதான் தகைமையான அரசாங்கமும் தகைமையான பாராளுமன்ற உறுப்பினர்களும் நம் நாட்டுக்குக் கிடைப்பர்.

## அநுர அரசு 2 மாதங்களுக்குள் 1.2 ட்ரில்லியன் ரூபாய் கடன்

### உதய கம்மன்பில குற்றச்சாட்டு

தற்போதைய அரசாங்கம் இதுவரை 1.2 ட்ரில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சி ஏற்று இரண்டு மாதங்களுக்குள் இத்தகைய கடன் தொகை பெறப்பட்டுள்ளது.

கடன் பெறப்போவதில்லை என ஆட்சியைக் கைப்பற்ற முன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறியிருந்தது.

தற்போது மாறுபட்ட வகையில் அந்த அரசாங்கம் நடந்து கொள்வதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (ம-7)

### மின்தூக்கி சரிந்ததில்

## பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட நால்வர் காயம்

கிராண்ட்பாஸ் முவதொர உயன அடுக்குமாடிக்குடியிருப்பு வளாகத்தில் மின்தூக்கி சரிந்து விழுந்ததில் கிராண்ட்பாஸ் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட நால்வர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

கிராண்ட்பாஸ் பொலிஸில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் மின்தூக்கி சரிந்து விழுந்ததில் காலில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிராண்ட்பாஸ் பொலிஸாரின் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கு கிடைத்த தொலைபேசி அழைப்பின் பிரகாரம், இந்த வீட்டுத் தொகுதியின் 5ஆவது மாடியில் உள்ளவர்கள் நேற்று முன்தினம் பிறந்தநாள் விழாவை நடத்தியுள்ளனர்.

குறித்த வீட்டுக்குச் சென்று வெளியேறிய போது, நான்காவது மாடியில் சுற்றிக் கொண்டிருந்த மின்தூக்கி சரிந்து விழுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் கொழும்பு வடக்கு பிரிவு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.எஸ். கே. ரூபசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் கிராண்ட்பாஸ் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

### அமெரிக்க டொலருக்கு நிகரான

## இலங்கை ரூபாவின் பெறுமதி குறைந்தது

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்றுக் குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக,

அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதியானது நேற்று முறையே 288.16 ரூபாவாகவும் 297.15 ரூபாவாகவும் உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (08) அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் கொள்முதல் மற்றும் விற்பனை பெறுமதியானது முறையே 288.13 ரூபாவாகவும் 297.18 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

எனினும், மத்திய கிழக்கு உட்பட ஏனைய பல வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்று உயர்ந்துள்ளது. (ம-7)

## தந்தை செலுத்திய வாகனம் மோதியதில்

### 3 வயதுக் குழந்தை மரணம்

மருதானைப்பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புகையிரத குடியிருப்புக்கு முன்பாக ஜீப் வாகனமொன்று வீட்டிற்கு அருகில் நிறுத்துவதற்காக சென்ற போது குழந்தையொன்று ஜீப்பில் நசுங்கி உயிரிழந்துள்ளது.

மருதானைப்பகுதியில் உள்ள புகையிரத குடியிருப்புத் தொகுதியில் வசித்து வந்த 3 வயதுக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் வீட்டுக்கு அருகில் ஜீப் வாகனத்தை நிறுத்துவதற்கு தந்தை பின்பக்கத்திற்கு வாகனத்தைச் செலுத்திய வேளையில் பின்னால் வந்த அவரது குழந்தை வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## யானை தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடை தும்பாலைக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு காட்டு யானைத் தாக்குதலுக்கிலக்காகி உயிரிழந்துள்ளார்.

திக்கோடைக் கிராமத்தைச் சேர்ந்த 8 பிள்ளைகளின் தந்தையான கார்த்திகேசு உருத்திரகாந்தன் என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

கருங்கல் உடைக்கும் இடத்தில் இருந்த போதே காட்டு யானை தாக்குதலுக்கிலக்காகி அவர் உயிரிழந்துள்ளதாக அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளிப் பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக காட்டுயானைகளின் அட்டகாசங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-7)

### முன்னாள் எம்.பி சுஜீவ சேனசிங்கவின்

## சொகுசு வாகனத்தை பறிமுதல் செய்ய உத்தரவு


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க பயன்படுத்திய கறுப்பு V8 ரக சொகுசு ஜீப்பை பறிமுதல் செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சி.ஐ.டியினரால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று பரிசீலிக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தத் துறையின் உண்மைகளைக் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட காரை அரச பரிசோதனையாளர்களின் மேலதிக பரிசோதனைக்கு அனுப்ப நீதிமன்றம் முன்னனுமதி அளித்துள்ளது. (ம-7)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2024
"நீங்கள் வலிமை,பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்"
ஹால் போர்லாண்ட்
(அமெரிக்க இயற்கையியலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி II

18

**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

iii.வாக்காளரொருவருக்கு தான் விரும்பிய கட்சிக்கு அல்லது சுயேட்சைக்குழுவிற்கு வாக்கை யளிப்பதற்கும் அக் கட்சியை அல்லது குழுவை பிரதிநிதித் துவப்படுத்துகின்ற வேட்பாளர்கள் மூவருக்கு விருப்புக்களை வெளிப்படுத்துவதற்கும் இட மளித்தல்.

iv.மக்கள் பிரதிநிதிகள் நிறுவ னங்களுக்கு கட்சிகளிலிருந்தும் சுயேட்சைக்குழுக்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரித் தாகுகின்ற பிரதிநிதிகளின் எண் ணிக்கை அத் தேர்தலில் உரிய கட்சி அல்லது குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையின் விகிதாசரத்திற்கமைய தீர்மா னிக்கப்படல்.

v.இலங்கையில் வாக்களிப்பு திறந்த கட்சிப் பட்டியல் முறையில் நடைபெறுவதால், கட்சியிலிருந்து தெரிவாகவுள்ள உறுப்பினர் களின் ஒழுங்குவரிசையைக் கட்சிகள் தீர்மானிப்பதில்லை. ஒவ்வொரு வாக்காளரும், தாங்கள் விரும்பிய கட்சி அல்லது குழுவுக்கும் அக் கட்சி அல்லது குழுவினால் நியமிக் கப்பட்ட வேட்பாளர்களில் குறைந் தது மூன்று பேருக்கும் வாக்களிக்க முடியும்.

இவ்வாறு தனிப்பட்ட வேட்பா ளர்கள் பெறும் விருப்புவாக்கு களின் எண்ணிக்கையை அடிப்ப டையாக வைத்தே ஒவ்வொரு கட்சி வேட்பாளர்களினதும் ஒழுங்கு வரிசை தீர்மானிக்கப் படுகின்றது.

vi. பாராளுமன்றத் தேர்தல் களில் நாடெங்கிலுமுள்ள அனை த்து தேர்தல் மாவட்டங்களுக்கும் கட்சிகள்/குழுக்கள் முழு நாட்டி லுமிருந்து பெற்றுக்கொண்ட வாக் குகளின் விகிதாசாரத்திற்கேற்ப 29 உறுப்பினர்கள் (தேசிய பட்டியல்) அவற்றிற்கு வழங்கப்படல். (அரசியல் அமைப்பின் 99 ஆம் உறுப்புரைக்கமைய)

vii. பாராளுமன்றத் தேர்தலில் தேர்தல் மாவட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப் பினர்களின் எண்ணிக்கையில் 1 உறுப்புரிமை (Bonus seat) தேர்தல் மாவட்டத்தில் அதிக வாக்கு களைப் பெற்றுக்கொண்ட கட்சிக்கு அல்லது குழுவிற்கு குறித் தொதுக்கப்பட்டதன் பின்னர் எஞ்சு கின்ற மீதமான உறுப்பினர்களின் எண் ணிக்கை மாத்திரம் கட்சிகளினதும் குழுக்களினதும் வாக்குகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கேற்ப பகிர்ந் தளிக்கப்படல்.

viii. பாராளுமன்றத்திற்குத் தேர் தல் மாவட்டமொன்றின் கீழ் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவியின் வெற்றிடத்தை நிரப்புதல் வேட்பாளருக்கு உரித்தான கட்சி யின்/குழுவின் வேட்புமனுவில் எஞ்சியிருக்கின்ற அடுத்த வேட் பாளரை நியமனஞ்செய்வதனூ டாக நிரப்புவதற்கு தெரிவத்தாட்சி அலு வலர் நடவடிக்கையெடுத்தல்.

ix. அரசியல்அமைப்பின் 99 ஆம் உறுப்புரையின்கீழ் பாராளு மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட் டுள்ள உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புதல் உரிய கட்சியிலிருந்து அல்லது சுயேட் சைக்குழுவிலிருந்து பெயர் குறித்த நியமனத்தினூடாக நிரப்பப்படுதல்.

### விகிதாசார தேர்தல்முறையில் எவ்வாறு வாக்களிப்பது?

அளிக்கப்படும் வாக்குகளில் ஒரு குறிப்பிட்ட தொகை வாக்குகள் நிராகரிக்கப்படுவதற்கு அவ் வப்போது சில காரணங்களும் தெரிவிக்கப் படுகின்றன. அவற்றில் ஒன்று தேர்த லில் போட்டியிடும் அபேட்சகர்கள் குறித்த வெறுப்பு அடுத்தது தேர்தல் சட்ட ஏற் பாடுகளுக்கு அமைய வாக்க ளிக்கத் தெரியாமை என்பவையா கும்.

இதைவிட ஒரு சிலர் இல ங்கை அரசியலில் உள்ள வெறுப் பின் காரணமாக வாக்குச்சீட்டில் தேவையற்றவை எழுதிவிட்டு வருவதையும், ஒரு சிலர் விருப்பு இலக்கத்திற்கு புள்ளடி போடுவதற்கு சுயேட்சை இலக்கத்திற்கு புள்ள டியிடுவதையும் காரணங்களாகக் கூறலாம்.

இக்காரணங்கள்சரியா? பிழையா? என்பதற்கு அப்பால் இங்கு நிராக ரிக்கப்படும் வாக்குகளின் எண் ணிக்கையைக் குறைப்பதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

அதுவே உடனடித் தேவை. ஜனநாயகத்தை வலுப்படுத்த விரும்புவர்களும் கொள்கை வகுப் பாளர்களும், அரசியல்வாதிகளும் சமூக நலன் ஆர்வலர்களும் தேர்தல்களின் போது நிராக ரிக்கப்படும் வாக்குகள் குறித்து அதிக கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானது.

வாக்களிக்கும் முறையை மக்க ளுக்கு தெளிவூட்டவேண்டும். இதன் மூலம் தேர்தல்களில் அளிக் கப்படும் வாக்குகளில் நிரா கரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கையையும் அதன் வீதத்தையும் எதிர்காலத்தில் பெரிதும் குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

### வாக்களித்தல்

1.பொதுத்தேர்தலில் வாக்களிப் பதற்காக, வாக்களிப்பு நிலை யத்துக்கு சென்ற பின்னர், உங்க ளுக்கு வழங்கப்படும் வாக்குச் சீட்டில் முதலில் தேர்தலில் போட்டி யிடும் கட்சி அல்லது சுயேட் சைக்குழுவின் சின்னத்துக்கு முன்னால் புள்ளடி (X) இட வேண்டும்.

2.அதன்பின்னர் அக்கட்சியில் போட்டியிடும் மூவருக்கு விருப்பு வாக்குகளை வழங்கலாம். வேட் பாளர்களின் இலக்கங்களுக்கு மேல் புள்ளடி இடவேண்டும்.

நீங்கள் விரும்பும்பட்சத்தில் ஒருவருக்கு மாத்திரம் விருப்பு வாக்கை வழங்க லாம். (அவ்வாறு வழங்கினால் மூன்று வாக்கு களும் அவருக்கு சென்றடையும் என அர்த்தப்படாது)

- மூன்றுக்கு மேற்பட்ட வேட் பாளர்களுக்கு விருப்பு வாக்கை பயன்படுத்தமுடியாது.

- கட்சி அல்லது சுயேட்சைக் குழுவுக்கு முன்னால் புள்ளடி இடா மல் விருப்பு வாக்கு பயன்படுத்தப் படுமானால் அந்த வாக்கு நிராகரிக் கப்பட்ட வாக்காகவே கருதப்படும்.

- மூன்றுக்கு மேற்பட்ட வேட் பாளர்களுக்கு விருப்பு வாக்கை பயன்படுத்துவதும் பிழையான நடை முறையாகும். இதுபற்றி பின்னர் பார்ப்போம்.

- புள்ளடி இடுவதற்கென ஒதுக் கப்பட்டுள்ள இடத்தில் புள்ளடி இட வும்.

விகிதாசார தேர்தல் முறைமை யில் வாக்கெண்ணலில் மூன்று கட்டங்கள் உள்ளன.

முதலாம் கட்டம்:- ஒவ்வொரு வாக்குப்பெட்டியிலுமுள்ள வாக்குச் சீட்டுகளின் தொகையை எண்ணி வாக்குச்சீட்டு கணக்குடன் ஒப்பு நோக்கலைக் குறிக்கும். வாக்குச் சீட்டு கணக்கு என்பது ஒரு வாக்களிப்பு நிலையத்தில் போடப் பட்ட வாக்குகளின் எண்ணிக்கை சம்பந்தமான கணக்கறிக்கை ஆகும்.

இரண்டாம் கட்டம்:- ஒவ் வொரு கட்சியினாலும் / சுயேட் சைக் குழுவினாலும் பெறப் பட்டுள்ள வாக்குகளை தனித்த னியாகப் பிரித்து அவைகள் பெற்றுள்ள வாக்குகளைக் கணக் கிடுவதாகும். இது பற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

மூன்றாம் கட்டம்:- வேட்பாளர் கள் ஒவ்வொருவரினாலும் பெறப் பட்ட விருப்பு வாக்குகளை தாளில் பதிந்து அவர்கள் பெற்ற வாக்குகளைக் கணக்கிடுவதா கும். இது பற்றியும் பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

### முதலாம் கட்டம்

ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலை யத்திற்குமுரிய ஒவ்வொரு வாக் குப் பெட்டியிலுமுள்ள வாக்குச்சீட்டு களைக் கணக்கிடும் போது அவற்றை ஐம்பது வாக்குச்சீட்டுகள் கொண்ட கட்டுகளாக் (இறப்பர் பட்டியிட்டு) கட்டி, எண்ணிய பின், வாக்கெண்ணிய குழுவுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத் தாட்சி அலுவலர் அவ் எண் ணிக்கையை அதற்கு உரிய படிவத்தில் (PE/28) குறிப்பீடு செய்து தலைமை வாக்கெண்ணும் அலுவலரிடம் கையளிப்பார்.

அப்போது தலைமை வாக் கெண்ணும் அலுவலர் அப் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கை (தொகை) வாக் கெடுப்பு நிலையத்தின் சிரேஸ்ட தலைமைதாங்கும் அலுவலரி னால் தனக்கு ஒப்படைக்கப்பட் டுள்ள வாக்குச் சீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையுடன் இணங்கு கின்றதாவெனப் பார்ப் பார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம்...

இவ்வாறு பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர்,

ஒருவர் வாகன விபத்தை ஏற்படுத்திவிட்டு வாகனத்தை நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த நபரைக் கைது செய்ய சென்றபோது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாகப் பொலிஸ் உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அதன்படி விசாரணைகளை மேற்கொண்டு குறித்த நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். (ம-7)

## இணைய வழி...

உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாத வாக்காளர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் தேர்தல் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட அடையாள அட்டையைப் பயன்படுத்தி நியமிக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க முடியும் என தேர்தல் ஆணைக்குழு தெளிவுபடுத்தியுள்ளது. (ம-7)

## தேர்தலுக்கான...

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பின்போது, வாக்காளர்களின் சிறிய விரலில் மை பூசப்படமாட்டாது.

இடது கையின் ஆள்காட்டி விரலில் மை பூசப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இடது கையின் சிறிய விரலுக்கு மை பூசினோம். பலருக்கு இன்னும் மை அடையாளங்கள் உள்ளன. எனவே, இம்முறை இடது கையின் ஆள்காட்டி விரலை குறியிட தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

நவம்பர் 14ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான அனைத்து முதற்கட்டப் பணிகளும் நிறைவடைந்துள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகள் இன்று (நேற்று) நள்ளிரவுடன் நிறைவடையும்.

இன்னும் 2 நாட்களில் இடம்பெறவுள்ள 10ஆவது பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 17,140,354 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன், இந்த வருடத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக சர்வதேச கண்காணிப்பாளர்கள் குழுவொன்று ஏற்கெனவே இலங்கைக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## டிசம்பர்...

தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ஐ.எம்.எப்பிடம் பெற்ற கடனை அரசால் செலுத்த முடியும். 2028இல் கடனைச் செலுத்தத் தொடங்குவோம். 2028இல் செலுத்த வேண்டிய கடனை கணக்கிட்டுள்ளோம்.

அந்தக் கடனை அடைக்கக் கூடிய பொருளாதாரத்தை அரசால் உருவாக்க முடியும்.

பொதுத் தேர்தல் முடிந்து இரண்டு நாட்களுக்குப் பிறகு IMF குழு இலங்கை வருகிறது.

அதன்பின் 3வது பரிசீலனையை முடித்து, அந்தப் பணியை ஜனவரி இறுதிக்குள், பெப்ரவரி மாத ஆரம்பத்தில் முடிப்போம்.

அப்போதுதான் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க ஸ்திரத்தன்மையை அடைய முடியும் என்றார். (ம-7)

## தேசிய...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பெரும்பான்மை ஆசனங்களை பெறுவது குறித்து நம்பிக்கையுடன் உள்ளது.

புதிய பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றுவது குறித்து தேசிய மக்கள் சக்தி நம்பிக்கையுடன் உள்ளது.

எனினும் அரசியல் சூழ்நிலையை வலுப்படுத்துவதற்காகத் எமது கட்சி தமிழ் முஸ்லிம் கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களிற்கு அழைப்பு விடுக்கும்.

எனினும் ஐக்கிய மக்கள் சக்திக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்போவதில்லை.

தமிழ் முஸ்லிம் சமூகத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தேசிய ஐக்கிய அரசாங்கத்தை அமைப்பது குறித்த பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயாராகவுள்ளோம்,

நாங்கள்ஏற்படுத்தவிரும்பும்ஐக்கியத்தை இதன்மூலமே ஏற்படுத்த முடியும்.

தேசிய ஐக்கிய அரசாங்கத்தை ஏற்படுத்தாவிட்டாலும், தேசிய மக்கள் சக்தியால் வெற்றிகரமாக ஆட்சி செய்ய முடியும். அனைத்து சமூகங்களிற்காகவும் பணியாற்ற முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## உரும்...

(வயது-53) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார்.

குறித்த நபர் தனக்குமுன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முற்பட்ட வேளையிலேயே விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடு உயிரிழந்தவரின் சடலம் கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது

சம்பவம்தொடர்பிலான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## யாழு...

பட்டா ரக வாகனம் ஒன்றும் மோதியே குறித்த விபத்து நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயம் அடைந்தவர்கள் உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காகப் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையிலே சிகிச்சை பலனின்றி பெண் உயிரிழந்துள்ளார்.

இதில் கம்பஹாவில் இருந்து யாழுக்கு சுற்றுலாவுக்காக வருகை தந்த டோனி பிரயன் பெரேரா ரணசிங்க வீரக்கொடிக குசும்புஷ்பராணி (வயது-60) என்ற ஒரு பிள்ளையின் தாயே உயிரிழந்தவராவார்.

மரண விசாரணைகளை யாழ். மாவட்ட மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2024.11.11 — சீட்டிழுப்பு இலக்கம் 5653 — X 3 9 1 3 6 4
அத சம்பத — X 1 3 6 4 — சீட்டிழுப்பு இலக்கம் 228

தன நிதானய — திகதி - 2024.11.11 — சீட்டிழுப்பு இலக்கம் - 1683 — K 58 59 72 78 K — Double Chance 33839

மெகா பவர் — திகதி 11/11/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2001 — R 04 46 56 58 78 — Double Chance 089089

லக்கி 7 VIP — திகதி 2024.11.11 — சீட்டிழுப்பு இலக்கம் 0479 — U 8 7 2 9 4 5 U

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3895 — சீட்டிழுப்பு திகதி 11.11.2024 — E 23 37 46 64 — E 176866

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.11.11 — சீட்டிழுப்பு இலக்கம் 962 — சிம்மம் 04 17 30 61 சிம்மம் — 045620 — 26

உத்தியோகபூர்வ முடிவுகள் — 11.11.2024 — வெற்றி வாரம் 361 — 0 — 5 0 2 9 5 8 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,407,816.00 — 89351

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2627 — சீட்டிழுப்பு திகதி 2024.11.11 — தினம் திங்கட்கிழமை — 47 49 53 76 U — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,099,850.40

சனிதா — 11.11.2024 — வெற்றி வாரம் 4788 — 06 31 48 53 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,993,211.60 — 52550

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4339 — சீட்டிழுப்பு திகதி 11.11.2024 — தினம் திங்கட்கிழமை — 18 19 48 58 — ரிஷபம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,867,275.20 — 220435

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — Y 26 05 44 50 73 — 1803 — 11.11.2024 திங்கட்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.555,137,292.60


ஜயோதா Jayoda — 2024.11.11 — வெற்றி வாரம் 2076 — 09 18 40 67 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,247,784.80

அட கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — 2453 — 2024.11.11 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,602,358.40 — 06 35 48 69 Z — 924120

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வித அழுத்தங்களுமின்றி பொலிஸார் செயற்படுகின்றனர்

## பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த



(கொழும்பு)

பாரபட்சம் மற்றும் தேவையற்ற செல்வாக்கு இல்லாமல் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உகந்த சூழலில் இலங்கைப் பொலிஸார் தற்போது செயற்படுவதாக பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டம் அனைத்து குடிமக்களுக்கும் சமமாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை தற்போதைய அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த உத்தரவை அனைத்து அதிகாரிகளுக்கும் தாம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், முன்னைய தேர்தலுக்குப் பின்னரான காலகட்டங்களில் அடிக்கடி வன்முறைகள் இடம்பெற்றன. எனினும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அவ்வாறான சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# தேர்தல் தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள்

## யாழில் கலந்துரையாடல்

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் நேற்று மாலை 04.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து 13.11.2024 ந் திகதி வாக்களிப்பு நிலையங்களுக்கு சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலகர்களுடன் செல்லும் பேருந்துகளின் போக்குவரத்து ஒழுங்குகள், முறைப்பாடுகளுக்கான உடனடி நடவடிக்கைகள் உள்ளடங்கலாக பல விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. ஜே. ஹாலிங்க ஜெயசிங்க, உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ், யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வு. சூரிய பண்டார, யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை உதவி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் கலந்து கொண்டிருந்தனர். (ம-7,33)

# தலைமன்னார் ரயில் சேவை இன்று மீண்டும் ஆரம்பம்

மஹவ மற்றும் அநுராதபுரம் வரையிலான ரயில் வீதி அபிவிருத்தி காரணமாக தற்போது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கும் தலைமன்னார் ரயில் சேவை இன்று (12) மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ளது.

அதன்படி, இன்று கொழும்புக் கோட்டை மற்றும் தலைமன்னார் இடையிலான ரயில் சேவையானது பின்வரும் வகையில் அமையவிருக்கின்றது.

**இலக்கம் 5003 - கொழும்புக் கோட்டையிலிருந்து - தலைமன்னார்** கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படல் பி.ப 16.15 - தலைமன்னாரினை அடைதல் பி.ப 22.15 (2024.11.12 ம் திகதியிலிருந்து)

**இலக்கம் 5004 - தலைமன்னாரில் இருந்து - கொழும்பு கோட்டை** தலைமன்னாரில் இருந்து புறப்படல் மு.ப 04.15 - கொழும்பு கோட்டையினை அடைதல் மு.ப 10.15 (2024.11.13 ம் திகதியிலிருந்து) (ம-7)

## தொழில்துறைகளுக்கு சலுகை

# ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் கலந்துரையாடல்



சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறைகளுக்கான சலுகை வழங்குவது குறித்து, நிதி மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ஜி.என்.ஆர்.டி அபொன்சு மற்றும் இலங்கை வங்கிகள் சங்கம், நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் கடன் சுமையால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

பராட்டே சட்டத்தை (Parate Execution) அமுல்படுத்துவது தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் அது எதிர்வரும் டிசம்பர் 15 ஆம் திகதியுடன் காலாவதியாகிறது.

இது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

பொருளாதாரத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்த வங்கித் துறைக்கு வழங்கக் கூடிய ஆதரவு மற்றும் தற்போது சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் பெற்றுக் கொண்டுள்ள கடன்கள் குறித்தும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் வங்கிகளில் பெற்ற கடன் தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரிக்கவும் இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது வங்கிகள் பராட்டே சட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினருக்கு வழங்கப்பட்ட கடன்களை வசூலிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதுடன், அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ம-7)

# கொச்சிக்கடை ஓ.ஐ.சி கைது

(கொழும்பு)

கொச்சிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் சட்ட விதிமுறை மீறல் தொடர்பில் அவர் கொழும்பு வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

# கிணற்றி...

சேர்ந்த சுவாம்பிள்ளை ரவி என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் கடந்த சனிக்கிழமை வீட்டிலிருந்து வெளியேறிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1568)
076 825 7716 (ஆகாஸ்)

VACANCY
கோப்பாயில் இயங்கும்
அழகுக்கலை நிலையத்திற்கு
பெண் உதவியாளர் தேவை.
தகைமை : அழகுக்கலையில்
NVQ3/NVQ4/Diploma முடித்தவர்கள் அல்லது
பழகவிரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
BLUSH BABE BEAUTY PARLOUR
077 440 7439, 077 795 6108

யாழ்ப்பாணம் - சென்னை
விமான சேவைகள்
யாழ் - சென்னை விமானப்
பயணச் சீட்டுக்கள்
38,500/= இலிருந்து விசேட விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான
ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
(534)
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்ட[illegible]
(C-1567)

மணமகள் தேவை
1989 ஆம் ஆண்டு, இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்த, துலா ராசி, சுவாதி நட்சத்திரம், கிரகபாவம் 5. சீனாவில் டாக்டராக பணி புரியும் மணமகனுக்கு பெற்றோர் பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
076 8995 179
[illegible] 4660 914
(2405)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, [illegible] வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org